# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 22 செவ்வாய்க்கிழமை (04-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:111


# முகமாலையில் உக்கிரச் சமர்!

## இருதரப்பும் மூர்க்கம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்4

**யாழ்ப்பாணம் கண்டி வீதியில் புலிகளிடம் பறிகொடுத்த பிரதேசத்தை மீளக் கைப்பற்றுவதற்காக இலங்கை அரசுத்துருப்புக்கள் ஆரம்பித்திருக்கும் 'வலிசக்கர' இராணுவ நடவடிக்கையை அடுத்து முகமாலையை அண்டிய பிரதேசத்தில் கடுஞ்சமர் வெடித்திருக்கின்றது.**

**முன்னெப்போதும் இல்லாதவாறு இரு தரப்பும் ஆக்ரோஷத்துடனும் மூர்க்கத்தோடும் அப் பகுதியில் மோதிவருவதாகக் களமுனைச் செய்திகள் தெரிவித்தன.**

கண்டிவீதியில் முகமாலைக்கும் பளைக்குமிடையில் புலிகள் கைப்பற்றிய பிரதேசத்தை மீட்கும் முயற்சியிலேயே படைத்தரப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

நேற்று இரண்டாவது நாளாக 'வலி சக்கர' நடவடிக்கையில் படையினர் மிகுந்த தீவிரத்துடன் ஈடுபட்டனர். பதிலடி கொடுப்பதில் புலிகள் ஆக்ரோஷமாகவும் மூர்க்கமாகவும் இருந்தனர். பல முனையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி நோக்கி ஷெல் வீச்சு! தாய், குழந்தை படுகாயம்!!

யாழ்ப்பாணம், ஏப்.4

குடாநாட்டுப் பக்கமாக இருந்து பூநகரிப் பகுதி மீது நேற்று முற்பகல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பூநகரிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளம்தாய் ஒருவரும், அவரது கைக்குழந்தையும் படுகாயமடைந்ததாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

தயாபரன் விஜி (வயது 24) பிறந்து 45 நாள்களேயான கைக்குழந்தை தயாபரன் வினோத் ஆகியோரே படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதல்களை அடுத்து பூநகரியை அண்டிய பகுதிகளில் மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# அனுருத்த ஓரங்கட்டப்படுகிறார் ஜனாதிபதி தலைமையில் யுத்தம்!

கொழும்பு, ஏப்.4

குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் படை நடவடிக்கைகளை முப்படைத் தளபதிகள் ஊடாக ஜனாதிபதியே நேரடியாக வழிநடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்தவின் பங்களிப்பின்றி தற்போதைய யுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்பு விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1995 நவம்பரில் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளும் பின்னர் வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய இராணுவ நடவடிக்கைகளும் ஜெனரல் ரத்வத்தையின் நேரடி வழிநடத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயங்களில் எல்லாம் இராணுவச் சீருடையுடன் அடிக்கடி யுத்த முனைகளில் காட்சி கொடுத்துவந்த ஜெனரல் ரத்வத்தை 'வெற்றி உறுதி'படை நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்புகள், தோல்வியை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் இருந்து படிப்படியாக ஓரங்கட்டப்பட்டார்.

தற்போது அவரது ஆலோசனை மற்றும் பங்களிப்பு இன்றியே ஜனாதிபதி படைத் தளபதிகளுடன் கலந்தாலோசித்து இராணுவத் திட்டங்களை வகுத்து நேரடியாக வழிநடத்துவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யுத்த நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு முப்படைத் தளபதிகளுக்கும் உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி படைநடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான விவரங்களை தளபதிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பளையில் சிக்குண்டோர் நேற்றும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.4

பளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து நேற்றும் பொதுமக்கள் எவரும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. இதனால் அங்கு சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பளையில் உள்ள மக்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறி தென்மராட்சி நோக்கி வந்தனர். இவர்களில் சுமார் ஆயிரம் பேரை மட்டும் மிருசுவிலூடாக அப்பால் செல்ல அனுமதித்த படையினர் ஏனையோரை கிளாலிப் பகுதியில் தங்கவைத்தனர்.

பளையிலிருந்து மேலும் மக்கள் வெளியேறத் தொடங்கியதையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 2மணியுடன் அங்கிருந்து மக்கள் வெளியேறுவது தடுக்கப்பட்டது. இதனால் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறமுடியாத நிலையிலுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# செய்தியாளரின் இல்லத்தின் மீது நள்ளிரவு குண்டுத் தாக்குதல்!

## இனந்தெரியாத கும்பல் கைவரிசை

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பைச் சேர்ந்த மூத்த செய்தியாளர் ஐ.நடேசனின் இல்லத்தின்மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் - முதலாவது வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தினுள் நள்ளிரவு வேளை புகுந்த கும்பல் ஒன்று கிரனேட்டுக்களை வீசியது.

இதனால் வீட்டின் முன்பகுதி சேதமடைந்தது. அச்சமயம் அவர் வீட்டில் இருந்தபோதும் அவருக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

படையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள இப்பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது கிழக்கிலங்கைச் செய்தியாளர்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

செய்தியாளரின் இல்லத்திலி

(12ஆம் பக்கம் பார்க்க)

# 3 லொறிகளில் உணவுப்பொருள்களுடன் செயலக அதிகாரிகள் இன்று கிளாலிக்கு

யாழ்ப்பாணம், ஏப்.4

பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் இருந்து வெளியேறி வந்து தற்சமயம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கிளாலி அந்தோனியார் ஆலயப் பகுதியில் சிக்குண்ட நிலையிலிருக்கும் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக மூன்று லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இன்று அங்கு எடுத்துச்செல்லப்படவுள்ளன.

இந்த உணவுப் பொருள்களுடன் யாழ். செயலக அதிகாரிகள் குழு ஒன்றும் இன்று கிளாலிக்குச் செல்லவுள்ளது.

கிளாலி அந்தோனியார் ஆலயப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை உடனடியாக விநியோகிக்குமாறு படைத்தரப்பினர் யாழ். செயலக அதிகாரிகளைப் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா மற்றும் சமையல் பாத்திரங்கள் என்பனவும் ஒரு தொகுதி அத்தியாவசிய மருந்து வகைகளுமே இன்று லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ-5-9)

## ஐ.நா.,செஞ்சிலுவை அமைப்புகளின் உதவிப் பொருள்களை ஏற்க இடம்பெயர்ந்தோர் மறுப்பு!

### உறவினர்களை மீட்டுத்தர கோருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.4

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகப் பிரதிநிதிகள் நேற்று மிருசுவில் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினர்.

பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலிருந்து வெளியேறி மிருசுவில் தேவாலயப் பகுதியில் தங்கியுள்ள பொதுமக்கள் பலர் இந் நிறுவனங்கள் வழங்கிய உதவிப் பொருள்களை ஏற்க மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

தமது உறவினர்கள் பலரை சொந்த இடங்களில் விட்டுவிட்டு வெளியேறி வந்துள்ள இவர்கள், அவர்களை மீட்டு இங்கு அழைத்துவர உதவுமாறு ஐ.நா. மற்றும் செஞ்சிலுவைப் பிரதிநிதிகளிடம் கோரினர்.

"உறவினர்களை மீட்டுத்தந்தாலே போதும்" என்று கூறிய அவர்கள் உதவிப்பொருள்களை ஏற்க மறுப்புத் தெரிவித்தனர்.

பாய், படுக்கைவிரிப்பு, சமையல் பாத்திரங்கள் போன்ற பொருள்கள் அங்கு தங்கியுள்ளோருக்கு வழங்கப்பட்டன. (ஐ-5)

## நேற்றும் கிபிர் தாக்குதல்

பளை, இத்தாவில் பகுதிகளில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

விடுதலைப் புலிகள் முன்னேறி இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் தொடர்ந்து விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.(ஐ-31-117)

# செஞ்சிலுவை பிரதிநிதி இன்று படை அதிகாரியைச் சந்திப்பார்

## மக்கள் வெளியேறுவதை அனுமதிக்கக் கோருவார்

யாழ்ப்பாணம்,ஏப்.4

பளைப்பகுதியில் சிக்குண்ட மக்களை அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு இன்று படை அதிகாரிகளைச் சந்தித்து வலியுறுத்தப் போவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி றொப்புவன் தெரிவித்தார்.

சர்வதேச மனித நேயச் சட்டங்களின் பிரகாரம் மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்வதை எவரும் தடுக்க முடியாது. எனவே பளை மற்றும் கிளாலிப் பகுதிகளிலிருந்து வெளியேற முடியாத நிலையில் இருக்கும் மக்களை அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அநுமதிக்குமாறு படை அதிகாரிகளை கோரவுள்ளோம். அத்துடன் இன்று கிளாலிப் பகுதிக்கு நேரிற் சென்று பொதுமக்களையும், படை அதிகாரிகளையும் சந்தித்து உரையாடவுள்ளோம்- என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதோர்

# கல்வி அலுவலகம் முன் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப்.4

ஆரம்பக் கல்விப் பாடநெறி ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்தும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத விண்ணப்பதாரிகள் நேற்று யாழ். கல்வி வலயம் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத சுமார் 300 விண்ணப்பதாரிகள் கலந்து கொண்டனர்.

யாழ். கல்வி வலயத்தின் உட்புறத்தில் உள்ள புற்றரையில் நேற்றுக் காலை 9-30 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் பிற்பகல் 2 மணி வரை நீடித்தது. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கொடியேற்ற விழா

தாயே காமாட்சி!

இன்று உனக்கு கொடியேற்றத் திருநாளல்லவா? உனது மக்களாகிய எங்களுக்கு எப்போது தாயே சமாதானக் கொடி பறக்கும் காலம் வரும் அம்மா?

உன்னுடைய திருவிழாக்களைக் கொண்டாட எம்மனம் துடித்துக்கொண்டிருக்கையில் எமது உடன்பிறப்புக்கள் யுத்தத்தின் காரணமாக துடித்துக்கொண்டிருக்கின்றார்களே! எப்போது தாயே! இந்த யுத்தத்துக்கு முடிவு காலம் வரும் அம்மா?

*கவியரசு நகைத் தொழிலகம்*
*இரத்தினக்கல் வியாபாரம்*
190/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(75077)

## மரண அறிவித்தலில் திருத்தம்

### திருமதி விநாசித்தம்பி மங்கையர்க்கரசி

கடந்த 01-04-2000 ஆம் திகதிய சஞ்சீவியில் பிரசுரமான மரண அறிவித்தலில் அன்னாரின் சிரேஷ்ட புத்திரி காலஞ்சென்ற சு.செல்வநாயகியின் பிரியமான தாயாரும், மு.சுப்பிரமணியத்தின் அருமை மாமியாரும் ஆவார் எனச் சேர்த்து வாசிக்குமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
திரு. வி. சேதுநாயகம் J. P.
(மகன்)
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*
(சி/11633)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பகீரதன் பத்மினி

(மின் பொறியியலாளர்)

சுண்டுக்குளி, விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகீரதன் பத்மினி அவர்கள் 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகேசு பகீரதன் (பொறியியலாளர், கல்முனை) அவர்களின் அன்பு மனைவியும், மதுராவின் பாசமிகு தாயாரும், திரு. நவரத்தினம் (இளைப்பாறிய நில அளவையாளர்), திருமதி நவரத்தினம் ஆகியோரின் அன்புப் புதல்வியும், சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் வீ.பொ.கார்த்திகேசு (சட்டத்தரணி), திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகளும், மாலா, லக்ஸ்மன், நளினி, றஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கா. ரவீந்திரன், கா.சுபேந்திரன், கா.பிரகலாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு
(மாமியார்)
24, புகையிரத வீதி,
சாவகச்சேரி.
(75068)

### திருமதி சோமலிங்கம் இந்திராதேவி

**(காந்திமதி)**

பருத்தித்துறை ஐயனார் கலட்டியைச் சேர்ந்த திருமதி சோமலிங்கம் இந்திராதேவி அவர்கள் 01-04-2000சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் க.சோமலிங்கத்தின் அன்பு மனைவியும், மதனிகாவின் (ஜேர்மனி) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினவடிவேலு - நவமணி தம்பதிகளின் மகளும், சிவஞானம் (கப்பல்), கலாமதி, கலைவாணி, இந்துமதி (ஜேர்மனி), வளர்மதி, மதுமதி ஆகியோரின் சகோதரியும், சந்திரன் (ஜேர்மனி), அற்புதராஜா, வைரமுத்து (ஜேர்மனி), யோகராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (04-04-2000) செவ்வாய்க் கிழமை மாலை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. அற்புதராஜா
(மைத்துனர்)
(பலநோக்குக் கூ.சங்கம், பருத்தித்துறை)
ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை.
(75069)

### திருமதி செல்லையா ஞானாம்பிகை

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா ஞானாம்பிகை நேற்று (03-04-2000) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகம் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவமோகன் (இலங்கை அரச கடற்படை அலுவலர்), இரத்தினசோதி (யாழ்.பல்கலைக்கழகம்), நவரத்தினம் (சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர், கண்டி), திருமதி இராஜேந்திரா நாகபூசணி, திருமதி சோமதேவன் செம்மணச்செல்வதி (கொழும்பு), அருண்முகவரதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), திருமதி செல்வரவீந்திரகுமாரன் ஜெயலக்ஷ்மி (கொழும்பு), இராமகிருஷ்ணன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இ.இராஜேந்திரா (முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி), ஆ.சோமதேவன் (பொறியியலாளர், கொழும்பு), வீ.செல்வரவீந்திரகுமாரன் (லேக்ஹவுஸ் நிறுவனம், கொழும்பு), நிர்மலாதேவி (கனடா), மஞ்சுளாதேவி, சகுந்தலாதேவி (கண்டி), இராஜலக்ஷ்மி (ஆஸ்திரேலியா), சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லையா சுப்பிரமணியம் (இளைப்பாறிய இறைவரி அலுவலர்) அவர்களின் அன்புச் சிறியதாயாரும், வேணுகோபால் (கனடா), மைதிலி (கனடா), வாசுகி (லண்டன்) ஜானகி, ஜீவகி, கீதா (கண்டி), பவானி (கண்டி), இராஜநாராயணன் (பொறியியற் பீடம், பேராதனை), விமலன், கஜேந்திரன், நிரஞ்சனன் (பொறியியலாளர், அமெரிக்கா), சுதர்சனன் (கொழும்பு), அகிலன் (ஆஸ்திரேலியா), காண்டீபன் (ஆஸ்திரேலியா), கல்யாணி (ஆஸ்திரேலியா), காயத்திரி (கொழும்பு), தேவகி, நித்தியா, அகிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (04-04-2000) செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் துன்னாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.இராஜேந்திரா
(மருமகன்)
இந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.
(11634)

## 3குடும்பங்கள் மிருசுவில் வந்தன

பளையிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவிலுக்கு வந்துசேர்ந்த மூன்று குடும்பங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுனால் நேற்று யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டன.

இந்த மூன்று குடும்பங்களிலும் இருந்த மூன்று நோயாளர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இராசேந்திரம் மகிந்தன்(6 மாதக் குழந்தை), ஷெல் வீச்சில் காயமடைந்த யோகராசா சர்மி(வயது2) மற்றும் ஒரு கர்ப்பிணிப் பெண் ஆகியோரே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (ஐ-5)

## மீன்பிடிக்கத் தடை

வடமராட்சி வடக்கு கடல் பகுதியில் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒருவாரகாலமாக நிலவிவரும் பதற்ற நிலையை அடுத்து கடந்த வியாழக்கிழமை முதல் இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-173)


கணக்கீடு
பாலவாசன்
A/L 2001
ஆரம்பம் :-
05.04.2K → 4-5p.m.
Shamrock Academy
(C/11632)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
புதிய பிரிவு !!
ஆரம்பம் 05-04-2000
பிற்பகல் 4.00 மணி
Spoken English
By. சி. சடகோபன்
O/L Day
வெகுவிரைவில்
(75061)

தேவை
அலுமினியத தொழிற்சாலைக்கு
ஸ்பின்னர் தேவை
தகுதி உடையோர்
உடன் தொடர்பு
கொள்ளவும்.
இல. 18, சிவன்வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.
(75053)

ராஜா
யாழ்ப்பாணம்
4 ஆவது வெற்றி வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சிவாஜி
மற்றும் பலர் நடித்த
படையப்பா
காட்சிகள்
10.30, 2.30

லிபேட்டி
அச்சுவேலி
சிவாஜி - ஜெயசித்ரா
கமல் மற்றும் பல
நட்சத்திரங்களின் நடிப்பில்
சத்யம்
காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223
(74706)

நாகம்ஸ்
சுன்னாகம்
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா
நடித்த
அம்மன்
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களைப் பேய்களுக்காகக்
கொலை செய்யும்
சம்பவங்கள் நிறைந்த படம்
(75070)


## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின்
முருக பக்தரும்
ஆலய பரிபாலனசபை உறுப்பினருமாகிய

### சீனியர் முத்துலிங்கம்

அவர்கள் 01-04-2000 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபம் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலசபையினரும்,
இந்து இளைஞர் தொண்டர் சபையும்
(75043)

### சேர்த்து வாசிக்குக

02.04.2000 அன்று வெளியான திருமதி பவுலீனப்பு அன்னம்மாவின் மரண அறிவித்தலில் அன்னார் திருமதி அந்தோனிப்பிள்ளை றெஜினோல்டின் மாமியாரும் ஆவார். என்பதைச் சேர்த்துக்கொள்ளவும்.

தகவல்:
பவுலீனப்பு
(75051)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா சத்தியபாலன்

ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசையா சத்தியபாலன் நேற்று (03.04.2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் ஞானம்மாவின் அன்பு மகனும் காலம்சென்ற நேசமலரின் அன்புக் கணவரும் யசோதரன் (லண்டன்), கிரிதரன்(கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரி இரத்தினம், சத்தியதாசன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயராசா, கோகிலா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் புனிதராசா(லண்டன்), கௌரி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரன், கரிதூரன், ஆகியோரின் பெரியதந்தையும், ஜெயராம், ஹரிதாஸ் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.04.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈவினை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மேரி இரத்தினம்
(சகோதரி)
ஈவினை,
புன்னாலைக்கட்டுவன்.
(75076)

### திருமதி பத்மினி பகீரதன்

(பொறியியலாளர்)

சுண்டிக்குளி விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினி பகீரதன் அவர்கள் 02.04.2000 ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் காலமானார்.

இவர் கார்த்திகேசு பகீரதன் (பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை) அவர்களின் அன்பு மனைவியும், திருநவரட்ணம்(இளைப்பாறிய நில அளவையாளர் - கனடா), மீனாம்பிகை (கனடா) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு (சட்டத்தரணி-சாவகச்சேரி) - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், மதுராவின் அன்புத் தாயாரும், மாலினி(கணக்காளர் - கனடா), Dr.லக்ஷ்மன்(கொழும்பு), Dr.நளினி(லண்டன்), றஜினி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரவிந்தன்(கணக்காளர் - கனடா) Dr.உமையாள்(கொழும்பு), மணிவண்ணன்(பொறியியலாளர் - லண்டன்), மகேஸ்வரா(கனடா) ஆகியோரின் மைத்துனியும், பொ.சண்முகசுந்தரம்(அதிபர் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2000) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்முனையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
திரு.பொ.சண்முகசுந்தரம்
(சித்தப்பா)
5, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
(75075)

### திருமதி துரைராசா கனகம்மா

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த திருமதி துரைராசா கனகம்மா நேற்று (03-04-2000) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் துரைராசாவின் அன்பு மனைவியும் அருந்தவசீலனின் (மூன்றாம் வருடம் கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்) அருமைத் தாயாரும் சரஸ்வதி,தவராசா,இரத்தினம்,மணி,மணியன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
து.அருந்தவசீலன்
(மகன்)
பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(75057)

### திருமதி முத்துலிங்கம் கமலாதேவி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் கமலாதேவி 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் வல்வெட்டித்துறை காலஞ்சென்ற நவரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், சுதுமலை வடக்கு காலஞ்சென்ற சின்னையா ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும், ஆறுமுகம் முத்துலிங்கத்தின் அருமை மனைவியும், ஸ்ரீபார்த்தன், ஸ்ரீசயந்தன், நந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராணி, இரத்தினராசா, செல்வராணி, குமரேசன் ஆகிஜயோரின் அன்புசவ் சகோதரியும், காளிராசா புவனேஸ்வரி, இராசதுரை சரஸ்வதி, பட்டம்மா, அழகேந்திரராசா, ரூபா சண்முகராசா, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05-04-2000) புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவரத்தினம் குமரேசன்
(சகோதரன்)
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(75065)

## கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட பெண்ணின்
# எலும்புக்கூட்டின் சில பகுதிகள்
# பரிசோதனைக்காகக் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

வீட்டில் இருந்து காணாமற்போய் 23 நாள்களின் பின்னர் கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட இளம் பெண்ணின் சடலத்தின் ஒரு பகுதியும் அவர் இறக்கும் போது அணிந்திருந்த ஆடையும் அவர் சடலமாகக் காணப்பட்ட கிணற்று நீரும் பரிசோதனையின் பொருட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் கடந்த மாதம் 8 ஆம் திகதி வீட்டில் இருந்து காணாமற் போன அரசரட்ணம் வித்தியா (வயது 20) என்ற இளம் பெண் 23 நாள்களின் பின் கடந்த 28 ஆம் திகதி பாவனை இல்லாத கிணறொன்றினுள் இருந்து எலும்புக்கூடாக மீட்கப்பட்டது தெரிந்ததே.

மரணவிசாரணையின் போது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சடலம் (எலும்புக்கூடு) பிரேத பரிசோதனையின் நிமித்தம் அன்றையதினமே யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரிபிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலம் மரணவிசாரணையின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் கடந்த ஞாயிறன்று பிரேதபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது

சடலத்தின் —எலும்புக்கூட்டின் கழுத்துடனான தலைப்பாகம் உடற்பாகத்தை விட்டு வேறாகக் கழன்று காணப்பட்டமையினால் அப்பகுதியில் ஒரு துண்டு எடுக்கப்பட்டு ஏனைய பொருள்களுடன் கொழும்புக்கு அனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனையை அடுத்து சடலத்தை எரிக்கக் கூடாதெனவும் சடலத்தை பாதுகாப்பாகப்புதைக்க வேண்டும் என்றும் உறவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் போது சடலத்தில் இருந்த சட்டைப்பகுதிக்குள் மடித்தபடி கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

சடலம் நீண்ட நாள்கள் நீரில் கிடந்தமையினால் அந்தக் கடிதத்தில் இருந்த எழுத்துக்கள் வாசிக்க முடியாத நிலையில் காணப்பட்டன. (இ-15)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

யாழ்ப்பாணம், வண்ணை, குளங்கரைமருதடிஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்)வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து நடைபெறும் உற்சவ காலத்தில் — எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும் மறுநாள் கைலாச வாகனத் திருவிழாவும் எதிர்வரும் 15 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சித்திரத் தேர்ப்பவனியும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

[க—15]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளைபுதன் கிழமை காலை 11. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும் அதற்கடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். உற்சவம் நடைபெறும் 10 தினங்களும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

(இ-6)

★ ★ ★

சுழிபுரம், ஏப்ரல் 4

சுழிபுரம்- பறாளை சிவசுப்பிரமணியசுவாமி ஆலய இலட்சார்ச்சனை நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தினமும்காலை, நண்பகல், மாலை ஆகிய நேரங்களில் கிரிகைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து ஆறு தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெறும். (க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

வண்ணை கைசாவில் முத்து விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

உற்சவ தினங்களில் காலை 10.30 மணிக்கு அபிஷேகமும் பூசையும் இடம்பெறும் பிற்பகல் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உள், வெளி வீதி உலா வருவார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

உற்சவதினங்களில் பிற்பகல் 4.30 மணி தொடக்கம் மகாபாரதம் பற்றி தொடர் சொற்பொழிவை கானசுதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்துவார். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

உற்சவ காலத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை இரதோற்சவமும் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

தினசரி காலை 9 மணி முதல் பகல் திருவிழாவும் பிற்பகல் 4 மணிமுதல் இரவுத் திருவிழாவும் ஆரம்பமாகும். [க-30]

# வலி. வடக்கு பிரதேச சபைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய், ஏப்ரல் 4

வலி. வடக்கு பிரதேச சபை பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் பின்வரும் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இதற்கான அங்கீகாரத்தைக் கடித மூலம் வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் கட்டுவன் புலம் பாடசாலை வீதியைத் திருத்துவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பன்னாலை சுப்பிரமணிய சுவாமி கோவில் வீதியைத் திருத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும். நகர்ப்புறக் குப்பைகளை அகற்றுவதற்கும், பசளையாக்குவதற்கும் 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை— மல்லாகம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் குழாய்க்கிணறு நிறுவுவதற்கு 25 ஆயிரம் ரூபாவும், அளவெட்டி தெற்கு ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையத்தில் குழாய்க்கிணறு நிறுவுவதற்கு 25 ஆயிரம் ரூபாவும், தெல்லிப்பழை கோவிற்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் குழாய்க் கிணறு நிறுவுவதற்கு 25 ஆயிரம் ரூபாவும், அளவெட்டி தெற்கு குருவளை நலன்புரி நிலையத்தில் குழாய் கிணறு அமைப்பதற்கு 25 ஆயிரம் ரூபாவும், அளவெட்டி வடக்கு பொன்னிப்புலத்தில் குழாய்க்கிணறு நிறுவுவதற்கு 25ஆயிரம் ரூபாவும், அளவெட்டி மேற்கு கும்பளை முன்பள்ளியில் குழாய்க் கிணறு நிறுவுவதற்கு 25 ஆயிரம் ரூபாவும், மயிலங் கூடல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழாய்க் கிணறு நிறுவுவதற்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

# பாடசாலைக்கு காணி கொள்வனவு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர்கள் சங்கமும் இணைந்து கல்லூரிக்கு கிழக்குப் பக்கத்திலுள்ள எட்டுப் பரப்பு காணியொன்றை கல்லூரியின் தேவைக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்வதென்று தீர்மானித்துள்ளன. இதற்கான நிதியை நன்கொடையாகப் பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-175)

# மருத்துவர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் சகல மருத்துவர்களுக்கும் யுத்தப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரியும் சகல மருத்துவர்களுக்கும் இந்த இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் என்று அரச மருத்துவர்கள் சங்கம் விடுத்து வந்த கோரிக்கையைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் செயலாளர் சி. அபயகுணவர்த்தன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரை காலமும் இந்தக் கொடுப்பனவுகள் வடக்கு — கிழக்கில் பணியாற்றி வந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த டாக்டர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-9)

# செய்திக் கொத்து

## திருத்தப்படாத வீதி

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 4

புன்னாலைக்கட்டுவன் வைத்தியசாலை வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அதிகாலையில் சந்தைகளுக்கு விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லும் விவசாயிகள் மற்றும் பொது மக்களும் இப்பாதையினூடாகப் பயணம் செய்யும் பாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத்தெரிவிக்கப்பட்டது.

(க-133)

## கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில்

தென்மராட்சி, ஏப்ரல் 4

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிர்மாணிக்கப்படும் இரு மூன்று மாடிக் கட்டடங்களின் தரை மாடி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்தக் கட்டடங்களை நிர்மாணிக்க மாகாணக் கல்வி அமைச்சு 25 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது.

(க-117)

★ ★ ★

சுழிபுரம், பெரியபுலோ அண்ணா சனசமூக நிலைய கூட்டுறவுக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதியுதவியுடன் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் ஊடாக இந்தக் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கட்டட அத்திவார வேலைத் திட்டத்துக்கு வலிகாமம் மேற்குப் பிரதேச சபை 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது

(க-28)

## நிதி உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

தும்பளை தெற்கு சிக்கனக் கடன் உதவு கூட்டுறவுச் சங்கம், சங்க அங்கத்தவர்களில் வீடு சேதமடைந்த நால்வருக்கு வீடு கட்டுவதற்கான நிதியுதவியாகத் தலா ஆறாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

போருட் நிறுவனம் இந்த நிதியை வழங்கியுள்ளது.

(க-15)

## பரிசளிப்பு வைபவம்

சுழிபுரம், ஏப்ரல் 4

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை புதன் கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று பேரின் விவரம் வருமாறு:

முதலாம் இடம் — செல்வி இ. சோபனா (யாழ்ப்பாணக்கல்லூரி), 2 ஆம் இடம் — ப. பிரதீபா (விக்ரோறியாக்கல்லூரி), 3ஆம் இடம் — பா. தேவகஜன் பண்ணாகம் மெய்கண்டான் ம. வி) [க-28]

## கொடுப்பனவு

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ''சீடா'' செயற்றிட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்படி வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவில் வழங்கப்பட்டு வருகின்றன. (க-133)

## விக்கிரகம்

சுழிபுரம், ஏப்ரல் 4

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புதிதாக மகாலட்சுமி விக்கிரம் பிரதிஷ்டை செய்வதற்காக தமிழகத்தில் உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விக்கிரகத்தை கொழும்பில் வாழும் வர்த்தகர் ஒருவர் தமது உபயமாக வழங்கியுள்ளார். (க-28)

## அனுமதி அட்டைகள் அனுப்பும் பணி ஆரம்பம்

குருநகர், ஏப்ரல் 4

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அனுப்பும் பணி வட இலங்கை சங்கீத சபையினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சைக்குத் தோற்ற முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படும்என வட இலங்கை சங்கீத சபை தெரிவித்தது.

(க-51)

## காசநோய் சிகிச்சை

கொழும்புத்துறை ஏப்ரல்4

யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 8.00மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை காசநோய் சம்பந்தமான சிகிச்சையும் ஆலோசனைகளும் மார்பு நோய்ச் சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. இந்திரராசாவினால் வழங்கப்படும்.

[க-30]

## வீதி செப்பனிடும் பணி விரைவில்

சுழிபுரம், ஏப்ரல் 4

பண்ணாகம் கிராமத்திலுள்ள வழக்கம்பரை பண்டத்தரிப்பு வீதி செப்பனிடும் வேலைகளுக்குரிய கற்கள் பறிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மேற்பார்வையில் செப்பனிடும் வேலைகள் விரைவில் நடைபெற உள்ளன.

இந்த வீதி நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-28)

## வகுப்பறைக் கட்டடம் திறப்பு

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 4

மட்டுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் கடந்த வியாழக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி பாடசாலையின் பழைய மாணவனான பொறியியலாளர் அமரர் இரத்தினராசா ஞாபகார்த்தமாக அவரதுபெயர் இந்தக் கட்டடத்துக்கு சூட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் இலங்கையர் கணேசன் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

[க-133]

# அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
தென்மராட்சிப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பகுதியில் எட்டு நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் மலசல கூட வசதிகள் மற்றும் குளிப்பதற்கான வசதிகள் போதாமல் உள்ளன.

ஒவ்வொரு நலன்புரி நிலையங்களிலும் ஒரு சில கிணறுகளும் ஓரிரு மலசல கூடங்களுமே இருக்கின்றன.

நூற்றுக்கணக்கான மக்கள் தங்கியுள்ள இடத்தில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் கிணறு, மலசல கூட வசதிகள் நலன்புரி நிலையங்களில் இல்லை.

இதேவேளை—

இடம் பெயர்ந்தவர்களில் பலரும் உடுத்த உடுப்புகளுடனே தப்பியோடி வந்துள்ளதால் அவர்களிடம் மாற்றுடைகளோ, படுக்கை வசதிகளோ இல்லை. இதனால் தரையிலேயே அவர்கள் உறங்குகிறார்கள்.

அடிப்படை வசதிகளில்லாத காரணத்தினால் நலன்புரி நிலையங்களிலுள்ளவர்களிடையே தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஜ-5)

## பளை அகதிகளின் சுகாதார வசதிகளைப் பேணக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
பளைப் பகுதியில் இருந்து ஏற்கனவே இடம்பெயர்ந்து கொடிகாமம் பகுதியில் தங்கியிருக்கும் அகதிகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக கொடிகாமம் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

மிருசுவில் பகுதியில் நீக்லஸ் தேவாலயத்தில் தங்கியுள்ள 26 குடும்பங்களையும், மிருசுவில் மாதா கோவிலில் தங்கியுள்ள 51 குடும்பங்களையும் அவர் நேரில் சந்தித்து ஆலோசனை தெரிவித்துள்ளார். (இ-15)

## ஏற்கனவே காணாமற்போன ரி 56 ரக துப்பாக்கிகள் மீட்பு

மட்டக்களப்பு, ஏப்ரல் 4
மட்டக்களப்பு அரசடி பொது நூலகத்தில் அமைந்துள்ள பொலீஸ் காவல் நிலையத்தில் கடந்த வருடம் ஜூலை மாதம் 29 ஆம் திகதி காணாமற்போன இரு ரி 56 ரக துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த கந்தசாமி செல்வராசா என்பவரை ரெலோ இயக்கத்தினர் பிடித்து விசாரித்தபோது இவர் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமை தெரிய வந்ததாகவும் இவரிடம் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டதாகவும் ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன. இவர் பின்னர் இராணுவ புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்தே இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது அரசடி பொலீஸ் காவல் நிலையத்தில் கொள்ளையடிக்கப்பட்ட துப்பாக்கி என்பது தெரியவந்தது.

கடந்த வாரம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான நடேசராசா ஹரிச்சந்திரன் என்பவரிடமிருந்து ஒரு துப்பாக்கி ஏற்கனவே மீட்கப்பட்டிருந்தது.

இவர்கள் இருவரும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ-21)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மருந்து வகைக்குத் தட்டுப்பாடு

சாவகச்சேரி, ஏப்ரல் 4
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஜமுனானந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

செலைன் வயர் ஊசி, அம்பசிலின், குளக்சிலின், வோல்டாறின், கிளினிக் மருந்து, சலரோக நோயாளர்களுக்குரிய மெட்போமின், தொய்வு நோயாளருக்குரிய வென்டோலின், உயர் குருதி அமுக்க நோய்க்குரிய பல வகை மருந்துகளுக்கும் இந்த வைத்தியசாலையில் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அவர் கூறினார்.

தற்போது தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படு ... (ஜ-531)


## புத்தூயிரத்தில் விடிவுதர கொடியேற்று

வண்ணையிலே உறைபவளே காமாட்சி
வையகத்தை வாழ்விக்கக் கொடியேற்று
எண்ணியவை நிறைவேற்றும் காமாட்சி
எங்களது துயர்போக்கக் கொடியேற்று
புண்ணியங்கள் அருளுகின்ற காமாட்சி
புத்தாயிரத்தில் விடிவுதரக் கொடியேற்று
நின் விழியால் எமைநோக்கு காமாட்சி
நிரந்தரமாய் தீர்வுவரக் கொடியேற்று.

— மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளின் இன்றைய [2000-04-04] கொடியேற்ற வைபவம் சிறப்புற வாழ்த்துவோர்:

**சரவணமுத்து கந்தசாமி அன்சன்**
(நகைத் தொழிற்சாலை)
இல. 947, நாச்சிமார்கோயிலடி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
T. P. 021-3473 (75029)


## மட்டக்களப்பில் இளைஞர் சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு, ஏப்ரல் 4
மட்டக்களப்பு - திருமலை வீதியில் பற்றிமாகிரி ஒழுங்கைக்கு அருகில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஞாயிறு பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இறந்தவர் மட்டக்களப்பு நாவலடியைச் சேர்ந்த அழகராசா ஸ்ரீதரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரிடம் தேசிய அடையாள அட்டை, இலங்கை செஞ்சிலுவை சங்க அங்கத்துவ அட்டை, இராணுவத்தினர் வழங்கிய பாதுகாப்பு அடையாள அட்டை என்பன இருந்ததாக மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் அண்மையில் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க்குழு ஒன்றில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

## மூவர் கைது

வவுனியா, ஏப்ரல்4
மூதூரில் மூன்று தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் நகரில் பொலீஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டதை அடுத்து இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-8)

## அமைச்சர்களுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஏப்ரல் 4
அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் மற்றும் கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோரை எதிர்வரும் 27 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அஷ்ரப் வெளியிட்டுள்ள நூலில் இடம்பெற்றுள்ள கவிதை ஒன்றினால் பௌத்த மதத்துக்கு அவதூறு விளைவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சிங்களத் தீவிரவாதப் போக்குடையவவரான மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர தாக்கல் செய்துள்ள மனு ஒன்றின் மீதே இந்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. (உ-3-4)

## அரச அதிபருக்கு பக்ஸ் செய்தி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைவரம் தொடர்பாக கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபருக்கு 'பக்ஸ்' மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

செயலக அதிகாரிகள் இந்த விவரங்களை அனுப்பியுள்ளனர். (ஐ-5)

## விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வுகள் நாளை

யாழ்ப்பாணம் ஏப்ரல் 4
யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 8ஆவது வருடாந்த அமர்வுகள் நாளை புதன் தொடக்கம் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளன.

அமர்வுகளின் முதலாவது நாளாகிய நாளை புதன் கிழமை சங்கத்தின் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நூலக அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். பிரதம விருந்தினராக பேராசிரியர் வி. ஆறுமுகம் கலந்துகொள்வார்.

காலை 9 மணிக்கு மங்கள விளக்கேற்றுதலுடன்தொடங்கும் இந்த நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் வரவேற்புரை, பிரதம விருந்தினர் உரை, பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியத்தின் நன்றி உரை ஆகியன இடம்பெற உள்ளன.

இவற்றைத் தொடர்ந்து 10-15 மணிக்கு "உயிரினச் சுற்றுச் சூழல் மாற்றங்கள்—சவால்களும் தீர்வுகளும்" எனும் தலைப்பில் ஆய்வுரைகள் இடம் பெறும்.

கே. எஸ். குகதாசனின் முன்னுரையுடன் பின் வருவோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

கலாநிதி சூசை ஆனந்தன் (இயற்கை வளங்களின் பாதுகாப்பும் உபயோகமும்) சி. விஜயரத்தினம் மற்றும் ஜி. மிகிந்தன் (குடாநாட்டில்பயிர்ச்செய்கைப்பாதிப்பு) பொறியியலாளர் எம். இராமதாசன் (நகரமயமாக்கலும் சந்தைப் பொருளாதாரமும்)

பிற்பகல் 1-45 மணிக்குத் தொடங்கும் அமர்வில் "மருத்துவ விஞ்ஞானத்துக்கான பௌதிகம்" குறித்து பேராசிரியர் கே. கந்தசாமி ஆய்வுரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 2-45 மணிக்கு மருத்துவ கலாநிதி சி. பவானி "சட்டவிரோத கருக்கலைப்புகள்" குறித்து உரையாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து பேராசிரியர் வி. அரசரத்தினம் "விரல்ரேகை பதிவில் மரபணு உபயோகம்" குறித்து உரையாற்றுவார். (இ-ரி)

### தென்மராட்சியில் உள்ளோருக்கு
## மேலும் ஒருவார காலத்துக்கு உலர் உணவு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
தென்மராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மேலும் ஒருவார காலத்துக்குரிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தற்பொழுது மூன்று நாள்களுக்கு இவர்களுக்குச் சமைத்த உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்னும் மூன்று நாள்களின் பின்னர் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

முகாம்களிலுள்ள மக்களுக்குப் படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள் வழங்குவது தொடர்பாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவிகளை நாடியுள்ளோம் என்றும் அவர் கூறினார். (ஐ 5)

## பிஸ்ரல் குழு தாக்குதல்

மட்டக்களப்பு, ஏப்ரல் 4
கொம்மாதுறை இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் துணைப் படையைச் சேர்ந்த பரமானந்தம் ரவீந்திரகுமார் (31 வயது) என்பவர் ஞாயிறு மாலை கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு அருகில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுடப்பட்டார்.

காயமடைந்த இவர் மட்டக்களப்பு பொது வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21)

## நூல்கள் கொள்வனவு

சண்டிலிப்பாய், ஏப்ரல் 4
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, ஈழத்து எழுத்தாளர்களினால் எழுதி வெளியிடப்பட்ட 50 நூல்களை அண்மையில் கொள்வனவு செய்துள்ளது. பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் பொது நூலகங்களுக்கு இந்த நூல்கள் வழங்கப்பட்டுள்ளதாக சபையின் செயலாளர் பொ. வைரமுத்து தெரிவித்தார். (க-135)


## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்: 07 — 06 — 1933



மறைவு: 05 — 03 — 2000

அமரர்
**திருமதி சின்னத்துரை சின்னம்மா**

நினைவுதனில் நிறைந்திட்ட எங்களுயிர் அம்மாவே
நீர்பிரிந்து மாதமொன்று ஆனதம்மா – இன்று
பார்தனிலே உங்கள் இனியமுகங் காணாது
பெருந்துயரங் கொண்டே வாடுகின்றோம் ஒன்றாய்!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

263, A. V. றோட்,
அரியாலை.

(75035)

## ஷெரீப்புக்கு மரணதண்டனை?

# பாகிஸ்தானில் பதற்ற நிலை; பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

இஸ்லாமாபாத், ஏப்ரல் 4

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான வழக்கில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட இருக்கும் நிலையில் நாடு முழுவதும் பெரும் பதற்ற நிலை தோன்றி உள்ளதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

தனதுகணவருக்கு எதிரான வழக்கில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டால் முஸ்லிம் லீக் கட்சித் தொண்டர்களும்ஆதரவாளர்களும் வீதிக்கு இறங்கிப்போராட்டம் நடத்த வேண்டும் என்று ஷெரீப்பின் மனைவி பேகம் குல்சும் அறைகூவல் விடுத்துள்ளார்.

வாகூரில் கட்சித் தொண்டர்களிடையே உரையாற்றும் போது அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

''எனது கணவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக — நானே தலைமை வகித்து — நாடு முழுவதும் போராட்டங்களை நடத்துவேன். இதன் மூலம் இராணுவ ஆட்சியாளர்களுக்குப்பாடம்புகட்ட வேண்டும்'' என்றும் குல்சும் மேலும் தெரிவித்தார்.

இதனை அடுத்து பாகிஸ்தான் முழுவதும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வழக்கில் ஷெரீப்புக்கு எதிராகத்தீர்ப்பு வழங்கப்பட்டால் பெரும் வன்முறைகள் வெடிக்கக் கூடும் என்று இஸ்லாமாபாத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் — தற்போதைய பதற்றம் காரணமாக நவாஸ் ஷெரிப் மீதான வழக்கை விசாரணை செய்து வரும் கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்ற நீதிபதியின் பாதுகாப்புகளை இராணுவ அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

நாட்டில் வன்முறைகள் ஏற்படாமல் இருப்பதற்காக முக்கிய நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

## ஜப்பானியப் பிரதமர் சுகவீனம்

ரோக்கியோ, ஏப்ரல் 4

ஜப்பானியப் பிரதமர் ஹெய்சோ ஒபூச்சி உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களின் இசுக்கள் இறந்து போவதே பிரதமரின் உடல் நலக் குறைவுக்குக் காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக ஏற்பட்ட அதிகரித்த வேலைப் பளுவே பிரதமரின் இந்த நிலைக்குக் காரணம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(இ-6 9)

## கார்கிலில் மற்றுமொரு ஊடுருவலை தடுக்க இந்தியா தயாராக வேண்டும்

### விசாரணைக் குழுத் தலைவர் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 4

இந்தியாவின் கார்கில் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் கடந்த ஆண்டு மேற்கொண்ட ஊடுருவல் நடவடிக்கை போன்ற மற்றுமொரு ஊடுருவல் நடவடிக்கையை எதிர்கொள்ள இந்திய அரசு தயாராக இருக்க வேண்டும்.

கார்கில் ஊடுருவல் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரும் பிரபல பாதுகாப்புத்துறை ஆய்வாளருமான எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய — பாகிஸ்தான் எல்லை முழுவதும் நவீன வேவு பார்க்கும் கருவிகளைப் பொருத்துவதன் மூலம் பாகிஸ்தானில் இருந்த ஊடுருவல்களைத்தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் நாட்டின் நிர்வாகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தவறி விட்டார். எனவே கார்கிலில் மற்றொரு ஊடுருவலுக்குப் பாகிஸ்தான் படையினர் முயலக் கூடும். இந்திய அரசு எதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

கடந்த சில மாதங்களாக கார்கில் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானின் ஊடுருவல்கள் அதிகரித்திருக்கின்றன. பாகிஸ்தானின் இத்தகைய மறைமுகப் போரை எதிர்கொள்ள இந்த நாடே தயாராக வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

[இ-6-9-ரி]

## மேற்கு நாடுகளின் ஊடகங்கள் ரஷ்யாவுக்கு எதிராக அவதூறு

### வெளிநாட்டு அமைச்சர் குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஏப்ரல் 4

மேற்கு நாடுகளின் தகவல் ஊடகங்கள் ரஷ்யாவுக்கு எதிராக விஷமத்தனமான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர் இவானோவ் குற்றஞ்சாட்டி உள்ளார்.

ரஷ்யா தொடர்பாக முற்றிலும் எதிரானதும் ரஷ்யா ஒரு காட்டுமிராண்டித்தனமானது என்ற கருத்தை ஏற்படுத்தக்கூடியதுமான பிரசாரத்தை மேற்குலகப் பத்திரிகைகளும் தொடர்பு சாதன ஊடகங்களும் மேற்கொண்டு வருகின்றன.

இது நாட்டின் மேல் மட்டுமல்ல முழு ரஷ்ய சமுதாயத்துக்கும் எதிரான ஒரு செயலாகும். திட்டமிட்ட ரீதியில் மேற்குலக தொடர்பு ஊடகங்கள் இதனைச் செயற்படுத்தி வருகின்றன.

உலகின் சுதந்திரக்குரலுக்கு பலம் சேர்த்து வரும் ரஷ்யாவை உலக அரங்கில் இருந்து ஒதுக்கி வைப்பதற்கான திட்டமிட்ட பிரசாரமே இதுவாகும்.

இதனை நாம் தொடர்ந்து இனிமேலும் அனுமதிக்க முடியாது. அவ்வாறு அனுமதித்தால் மேற்கு நாடுகளின் சூழ்ச்சி வலையில் நம்மை நாமே வீழ்த்தியவர்கள் ஆவோம்.

இவ்வாறு இகோர் இவானோவ் மேலும் கூறினார்.

[ஐ-6-ரி]

### கைது

பாகிஸ்தானின் எல்லையைக் கடந்து சட்டவிரோதமாக ஆப்கானிஸ்தானுக்குள் நுழைய முயன்ற சர்வதேச தீவிரவாதி எனக் கருதப்படும் ஒஸாமா பின்லேடனின் சகா ஒருவர் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## 1994 இனப் படுகொலைகளில் தொடர்புடைய 8 பேருக்கு றுவாண்டாவில் மரண தண்டனை விதிப்பு

கம்பாலா, ஏப்ரல் 4

றுவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஹூட்டு, ருட்ஸி இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட இன வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று 8 பேருக்கு மரண தண்டனை வழங்கி உள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த மேலும் 6 பேரை அந்த நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அதேசமயம்—

றுவாண்டா இனப்படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஐ.நா. குழு ஒன்று அந்த நீதிமன்றத்தால் குற்றவாளி என முன்னர் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் விசாரணை செய்ய வேண்டும்என்று கோரி உள்ளது.

1994 ஆம் ஆண்டு றுவாண்டாவில் இடம்பெற்ற இனக் கலவரங்களின்போது 8 லட்சம் மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் ஒருவாரகால நிகழ்வுகள் தற்போது அங்கு நடைபெற்று வருகின்றன.

(இ-6-9-ரி)

## பேச்சுக்களைத் தொடர்ந்து அசாமில் யுத்த நிறுத்தம்

புதுடில்லி, ஏப்ரல் 4

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் போடோ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து அங்கு யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

போடோ இனப் பழங்குடி மக்களின் உரிமைகளுக்காக நீண்ட காலமாகப் போராடி வரும் போடோ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் அண்மையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

இதனை அடுத்து இரு தரப்பும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுவதற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

போடோ விடுதலைப்புலிகள் அமைப்புடனான பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்று முடிந்துள்ளதால் விரைவில் மற்றுமொரு தீவிரவாத அமைப்பான போடோலாண்ட் ஜனநாயக முன்னணியுடனும் பேச்சுக்கள் நடத்த முடியும் என்று இந்திய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

(இ 6-9-ரி)

## ஐரோ.- ஆபிரிக்க தலைவர்கள் மாநாடு கெய்ரோவில் ஆரம்பம்

### ஏழை, பணக்கார நாடுகள் முதல்சந்திப்பு

கெய்ரோ, ஏப்ரல் 4

ஆபிரிக்க — ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கூட்டுமாநாடு நேற்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் ஆரம்பமானது.

உலகின் ஏழைகள் நிறைந்த ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களும் செல்வந்த நாடுகளின் தலைவர்களும் கூட்டாக இணைந்து நடத்தும் முதலாவது மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்கநாடுகளின் 53 தலைவர்களும் ஐரோப்பிய நாடுகளின் 15 தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆபிரிக்க நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார நிலைகள் குறித்து மேற்படி மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது,

சில ஆபிரிக்க நாடுகளில் தற்போது இடம்பெற்றுவருவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் ஆராயப்பட உள்ளது.

(இ-6-9-ரி)

## இந்தியக் கடற்படைக்கு புதிய போர்க் கப்பல்

புதுடில்லி, ஏப்ரல் 4

இந்தியக் கடற்படையில் ஐ. என். எஸ். ஆதித்தியா, என்ற புதிய போர்க் கப்பல் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

இந்தியாவிலேயே முதன் முறையாக இந்தக் கப்பல் வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்டது.

அதி நவீன வசதிகளையும், உயர் வலுவுள்ள ஆயுதங்களையும் கொண்டுள்ள இந்தக் கப்பல் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும்.

(இ-6-9-5)

## தெற்கு லெபனானில் சிரியப் படைகள்: லெபனானின் யோசனைகளுக்கு இஸ்ரேல் தலைவர்கள் எதிர்ப்பு

ஜெருசலேம், ஏப்ரல் 4

இஸ்ரேலியப் படையினர் தெற்கு லெபனானில் இருந்து வெளியேறிய பின்னர் அங்கு லபனான் துருப்புகளுடன் சிரியத் துருப்புகளையும் பணியில் ஈடுபடுத்துவது என்று லெபனான் தெரிவித்த யோசனைக்கு இஸ்ரேலியத் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் சோதிக்கத் தான் முன்வரப் போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் தெரிவித்தார்.

தெற்கு லெபனானில் வேறு எந்த ஓர் இராணுவத் தலையீட்டையும் இஸ்ரேல் கடுமையாக எதிர்க்கும் என்று இஸ்ரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் டேவிட் லெவி கூறினார்.

தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் படையினர் எதிர்வரும் ஜூலை மாதத்தில் விலக்கிக் கொள்ளப்படுவர் என்று இஸ்ரேல் அறிவித்திருந்தது இதனை அடுத்து லெபனான் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் படையினர் நிலை கொண்டிருந்த பகுதிகளில் சிரிய நாட்டுப் படைகளையும் கடமையில் ஈடுபடுத்தலாம் என்று கூறி இருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே இஸ்ரேல் தலைவர்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

(இ-6-9-ரி)

## தடுப்பு முகாம்களுக்குச் செல்ல ஐ.நா.அதிகாரிக்கு அனுமதி மறுப்பு

குறோஸ்னி, ஏப்ரல் 4

செச்சினியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ. நா. மனித உரிமைகள் மன்ற அதிகாரி மேரி றொபின்சன் ரஷ்யப் படையினரால் செச்சினியாவில் நடத்தப்பட்டு வரும் தடுப்புமுகாம்களுக்குச்சென்று பார்வையிடுவதற்கு அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர்.

இத்தகைய முகாம்களில் செச்சினியத் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை ரஷ்யப் படையினர் சித்திரவதை செய்து வருவதாகவும் பலரை இந்த முகாம்களில் வைத்து அவர்கள் படுகொலை செய்துள்ளதாகவும் செச்சினியப் பெண்கள் பலர் இத்தகைய முகாம்களில் வைத்து ரஷ்யப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு,வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-6-9)

# வெளி மாவட்டங்களுக்கு செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 3 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(130722ஏ), (130726ஏ),
(131746ஏ), (131765ஏ),
(135522ஏ), (138159ஏ),
(138217ஏ), (138217பி),
(138315ஏ), (138317ஏ),
(138387ஏ), (138419ஏ),
(138422ஏ).
(138467ஏ), (138508ஏ),
(138508பி), (138508சி),
(138529ஏ), (138529பி),
(138572ஏ), (138572பி),
(139656ஏ), (139689ஏ),
(139692ஏ), (139769ஏ),
(139769பி), (139768சி).

### யாழ்ப்பாணம்

[136090 ஏ],

### கோப்பாய்

[134172 ஏ],[134172 பி],
[135989 ஏ], [135989 பி],
[135989 சி], ]136235 ஏ],
[136244 ஏ], [136253 ஏ],
[136253 பி], [136253 சி],
[136254 ஏ[,
[136265ஏ],[136265 பி],
[136282 ஏ], [136400 ஏ],
[136400 பி], [136409 ஏ],
[136409 பி], [136409 சி],
[186426 ஏ], [136432 ஏ],
[136443 ஏ], [136443 பி].
[136444 ஏ], [136446 ஏ].
[136447ஏ], [136467ஏ],
[136470ஏ], [136485ஏ],
[136485பி], [136487ஏ].
[136491ஏ], [136491பி],
[136505ஏ], [136516ஏ].
[136525ஏ], [136554ஏ],
[136554பி] [134554சி].
[136555ஏ], [136555பி],
[136555சி], [136601ஏ].
[136601பி], [136610சி],
[136601டி], [136601ஈ].
[136602ஏ], (136602பி),
(136604ஏ), (136605ஏ),
(136618ஏ), (136618பி),
(136620ஏ), (136620பி),
(136621ஏ), (136627ஏ),
(136641ஏ), (136641பி),
(13641சி), (136641டி).
(136642ஏ), (136642பி),
(136642சி), (136642டி),
(136642ஈ), (136649ஏ),
(136649பி), (136650ஏ),
(139454ஏ), (139454பி),
(139463ஏ), (139467ஏ),
(139475ஏ), (139476ஏ).
(139476பி), (139476சி),
(139477ஏ), (139834ஏ),
(139835ஏ), (139839ஏ).
(139842ஏ), (139847ஏ),
(139852ஏ), (139852பி),
(139862ஏ), (139862பி),
(139867ஏ), (139897பி),
(139887ஏ), (139887பி),
(139890ஏ), (139895ஏ),
(139895பி), 135895சி),
(139895டி), (139899ஏ),
(139899பி), (139899சி),

### நல்லூர்

(128331ஏ), (128338ஏ),
(128338பி), (133125ஏ),
(133125பி), (136046ஏ),
(136171ஏ), (136190ஏ),
(136733ஏ), (136733பி),
(136743ஏ)
(136750 ஏ), (136750 பி),
(139474 ஏ), (139858 ஏ),
(139863 ஏ), (139863 பி),
(135552 ஏ), (135552 பி),
(135522 சி), (135731 ஏ),
(138101 ஏ), (138178 ஏ),
(138178 பி), (138505 ஏ).
(138531 ஏ), (138531 பி).
(138532 ஏ), (138533 ஏ),
(138533 பி), (138541 ஏ),
(138576 ஏ), (138578 ஏ),
(139537 ஏ), (139545 ஏ),
(139545 பி), (139608 ஏ),
(139608 பி), (139640 ஏ),
(139640 பி),(139662 ஏ),
(139662 பி), (139663 ஏ),
(139663 பி), (139663 சி),
(239663 டி), (139701 ஏ)
(141416 ஏ).

### சண்டிலிப்பாய்

(129103 ஏ),(139103 பி),
(129104 ஏ), (130167 ஏ),
(130167 பி),(130167 சி),
(130748 ஏ), (130791ஏ),
(130792 ஏ), (130792பி),
(131584 ஏ), (131584பி),
(131772 ஏ), (131838 ஏ),
(131838 பி), (131878ஏ),
(131878 பி), (135556ஏ),
[135728ஏ], [135728 பி),
[135974 ஏ], [138108 ஏ],
[138108 பி], [138117 ஏ]
[138117 பி], [138206 ஏ],
[[138262 ஏ], [138262 பி],
[138262 சி[, [138262 டி]
[138262 ஈ], [138282 ஏ],
[138308 ஏ],
(138308ஏ), (138351ஏ),
(138351பி), (138361ஏ),
(138379ஏ), (138379பி),
(138379சி), (138380ஏ),
(138396ஏ), (138397ஏ),
(138397பி), (138409ஏ),
(138430ஏ), (138430பி),
(138430சி).
(138455ஏ), (138455பி),
(138455சி), (138455டி),
(138470ஏ), (138470பி),
(138470சி), (138515ஏ),
(138560ஏ), (139573ஏ),
(139613ஏ), (139613பி),
(139613சி), (139634ஏ),
(139725ஏ), (139735ஏ),
(139815ஏ).

### தெல்லிப்பழை

(136393ஏ), (129206ஏ),
(131840ஏ), (131840பி),
(131877ஏ), (131877பி),
(134408ஏ), (135613ஏ),
(135699ஏ), (135865ஏ),
(138127ஏ), (138152ஏ),
(138283ஏ), (138554ஏ),
(141303ஏ), (141424ஏ).

### உடுவில்

(123946ஏ), (134132ஏ),
(134253ஏ), (134269ஏ),
(136236ஏ), (136331ஏ),
(136331பி), (136333ஏ),
[136337], [136337பி],
[136347ஏ], [136362ஏ],
[136368ஏ], 136377ஏ],
[136377பி], [139465ஏ],
[129170ஏ], [130578]ஏ,
[130578பி], [130635பி],
[130785ஏ].
(130785பி), (131824ஏ),
(135584ஏ), (135591ஏ),
(135601ஏ), (135601பி),
(135601சி), 135657ஏ),
(135658ஏ), (135826ஏ),
(135826பி), (135915ஏ),
(135951ஏ).
(138183ஏ), (138221ஏ),
(138250ஏ), (138250பி),
(138250சி), (138297ஏ),
(138298ஏ), (188299ஏ).
(138310ஏ), (138310பி),
(138316ஏ), (138316பி),
(138332ஏ), (138332பி),
(138355ஏ), (138355பி),
(138386ஏ), (138398ஏ),
(138442ஏ), (138471ஏ).
(138513ஏ), (138530ஏ).
(138564ஏ), (139531ஏ),
(189532ஏ), (139627ஏ).
(139635ஏ), (139679ஏ),
(139813ஏ), (141196ஏ),
(141196பி), (141402ஏ).

# தீவக மக்கள் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்

தீவக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று 30 ஆம் திகதி ஈ. பி. டி.பியின் தீவகக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

தீவகத்தில் உள்ள 60 கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த கிராம சேவையாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பி.யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான ந. மதனராஜாவுடன் இவர்கள் தமது பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

அன்றை தினம் ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கே. என். டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட இவர்கள் தீவகத்தையும் —யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பாதையாகப் பண்ணைப் பாலம் உள்ளதால் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அபிவிருத்திக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றைக் கொண்டு வருவதற்கு பெரும் சிரமப்பட வேண்டி உள்ளதால் அதனைப் புனரமைக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்தனர்.

தீவுப்பகுதிக்கான படகுச் சேவையைச் சரிவர இயங்க வைக்க வேண்டும் எனவும் —

புங்குடுதீவு வைத்திய சாலையை அபிவிருத்தி செய்து வீதிகளைப் புனரமைக்க வேண்டும் என்றும் இவர்கள்கேட்டுக்கொண்டார்

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

## ஈ. பி. ஆர். எல் எவ். அமைப்பு அறிக்கை

வவுனியா, ஏப்ரல் 4

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசு முன்வர வேண்டுமெனக் கோரி வவுனியாவில் 320 க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான அடையாள உண்ணாவிரதப்போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட ஈ.பி.ஆர்.எல்,எப் அமைப்பு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வருவதோடு இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் நேற்று மகஜர்களை அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட ஈ. பி. ஆர். எல். எப். விடுத்த அறிக்கையில் —

வவுனியா மாவட்டத்தில் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் 320 க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக யுத்தப் பிரதேசங்களில் சேவையாற்றிவந்தவர்கள். நாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலையின் கீழ் சொல்லொணாத் துன்பங்களைத்தினமும் சந்தித்துச் சோர்ந்து போயுள்ள மக்களின் பிள்ளைகளுக்கு தொண்டர் ஆசிரியர்கள் வழங்கிவரும் கல்விச் சேவையினை நாம் மதிக்கவேண்டி உள்ளது.

தொண்டர் ஆசிரியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிப்பல தடவைகள் ஜனநாயக வழிமுறையில் போராட்டங்கள் நடத்தி தமது] கோரிக்கைகளை முன் வைத்தபோதும், அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டதே தவிர ஆசிரிய நியமனம்வழங்கப்படவில்லை

இதன் காரணமாகவே தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு — கிழக்கு பகுதி எங்கும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த முன்வந்துள்ளனர். இந்த நியாயமான கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசும் மேலான கவனத்துக்கு எடுத்து இவர்களுக்குத் தகுதி அடிப்படையில் நியமனம் வழங்க வேண்டும.

இவ்வாறுஇவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-8-

# வலிகாமம் கல்வி வலயத்தில் பயிலுநர் ஆசிரியராக 43 பேர்

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 4

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை பயிலுநர் ஆசிரியர்களாக ஆட்சேர்க்கும் திட்டத்தின் கீழ் வலிகாமம் கல்வி வலயத்தில் 43 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இவர்களில் 24 பேர் ஆங்கிலப் பாடத்துக்கும் 16 பேர் ஆரம்பக் கல்வி பாடத்துக்கும் இருவர் கணிதப் பாடத்துக்கும் ஒருவர் விஞ்ஞானப் பாடத்துக்கும்நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:-

### ஆங்கிலம்

மாலினி கந்தசாமி, ஜெயந்தி பாலச்சந்திரன், சுப்பிரமணியம் உதயசங்கர், ஜெயலலிதாவேலுப்பிள்ளை, காந்தரூபி சண்முகநாதன், கனகசபை சத்தியேஸ்வரி. பிறேமாவதி விஸ்வலிங்கம், சுதர்சினி சண்முகநாதன், ரவிச்சந்திரன் மகாலட்சுமி, கமலினிகார்த்திகேசு, தாரணி துரைசிங்கம், சண்முகநாதன் கோவேந்தன், மகாலிங்கம் லிங்கேஸ்வரி,ஜெயந்திவைத்திலிங்கம், சுதாமதி சிவசுப்பிரமணியம், மதிவதனா இராசரட்ணம், சுமாலினி சிவசுப்பிரமணியம், கிருபாகினி மார்க்கண்டன், ஆன்ஜடா அருந்தவநாதன்,சிவப்பிரியா லோகேஸ்வரன் அகிலா மயில்வாகனம், அல்லினல்சின்னராசா அல்றிஸ் குறூஸ், பாலகிருஷ்ணராஜா ஜெயராணி, மனோராணி வைத்திலிங்கம்.

### ஆரம்பக்கல்வி

கமலச்செல்வி அழகரட்ணம், இந்திராணி துரைராசா, மார்க்கண்டு ஜெயந்தினி, குமாரவேலு செல்வமலர், அகிலாதேவி செல்லத்துரை, கலைவாணி வயிரவப்பிள்ளை, மேரிறெஜினா றஞ்சிதமலர் நவரட்ணசிங்கம், குமுதினி வேலுப்பிள்ளை, குமாரதர்சினி திருப்பதிராயன், சசிமாலா சிவபாலசிங்கம், சுகிர்தா சியம்புநாதன், மைதிலி சிவநாதன், கௌரி முருகேசு, தமயந்தி சிவராசா, குமாரய்யா லயனல் மோகனதாஸ், சந்திரலீலா சிவசுப்பிரமணியம்.

### கணிதம்

தேவராசா விக்கினேஸ்வரன், சின்னத்தம்பி நித்தியானந்தன்.

### விஞ்ஞானம்

கனகரட்ணம் தேவபாலன்.

(இ-152)

# சனசமூக நிலையங்களுக்கு தொலைக்காட்சி

காரைநகர், ஏப்ரல் 4

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து சனசமூக நிலையங்களுக்குத் தலா ஒரு லட்சத்து 10 ஆயிரம்ரூபா பெறுமதியான தொலைக் காட்சிப்பெட்டி, ஜெனரேட்டர் என்பன வழங்கப்பட உள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராசா தெரிவித்தார்.

காரைநகர் சிவகௌரி சனசமூக நிலையம், மருதபுரம் சனசமூக நிலையம்,விளானை சனசமூக நிலையம் மற்றும் கரம்பன் மேற்கு சன சமூக நிலையம், நாரந்தனை கிழக்கு சனசமூக நிலையம் ஆகிய 5 சனசமூக நிலையங்களுக்குமே மேற்படி பொருள்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை —

காரைநகர் ஸ்ரீசிதம்பரேஸ்வரா சனசமூக நிலையம், மருதபுரம் சனசமூக நிலையம், செந்திரேசா சனசமூக நிலையம், ஊரி சனசமூகநிலையம் ஆகியவற்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-73)

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூன்று கல்விக் கோட்டக் கிளைகளின் புனரமைப்புக் கூட்டங்கள் நாளை மற்றும் புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்களில் கிளைகளுக்கான நிர்வாக சபைத் தெரிவும் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

நாளை புதன்கிழமை பிற்பகல் 12. 30 மணிக்கு வேலணைக் கிளையின் கூட்டம் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும்—

வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் கிளையின் கூட்டம் மருதனார்மடம் இராமநாதன்கல்லூரியிலும்—

வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சண்டிலிப்பாய்க் கிளையின் கூட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —நடைபெறவுள்ளன.

(இ-10)

# தென்னிந்திய திருச்சபை பேராயர் தலைமையில் நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தென் இந்தியத் திருச்சபையின் பேராயர் அதிவண எஸ்.ஜெபநேசன் தலைமையிலான குழுவினரால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வன்னிப் பகுதியில் உள்ள அக்கராயன், ஆனைவிழுந்தான், கோணாவில், சுதந்திரபுரம், மல்லாவி, விசுவமடு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கே இவ்வாறு பொருள்கள் வழங்கப்பட்டன.

அகில உலகத் திருச்சபை மன்றம் மற்றும் டபிள்யூ. சி. சி. ஆகியவற்றின் உதவியுடன் பேராயர் அதிவண எஸ். ஜெபநேசன், திட்டப் பணிப்பாளர் சுரேஷ் தம்பு, வணபிதாக்களான அனுகூலன், ஜெயக்குமாரன், சொலமன் ஆகியோர் கொண்ட குழுவினரே இந்த உதவிகளை வழங்கினர்.

இவர்கள் உலர்உணவு, உடைகள், அரிக்கன்லாம்பு, பாய் போன்றவற்றை வழங்கினர்.

(இ-10)

உதயன்

## விஞ்ஞான விழிப்புணர்வு

விஞ்ஞானம் முன்னர் எப்போதும் இல்லாதவாறு வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. அந்த வளர்ச்சியின் விளைவுகள் ஒரு பக்கத்தால் சில தீமைகளுக்குக் காலாக இருந்த போதிலும், மனித வாழ்க்கையின் சகல துறைகளிலும் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கி வருகின்றன.

விஞ்ஞானம் — அதன் நல் விளைவுகள் — மனித வாழ்க்கையுடன் ஒன்றிவிட்டவையாக, நாளாந்த வாழ்வில் தவிர்க்க முடியாதவையாக மாறிவருகின்றன. ஆகையால் விஞ்ஞான அறிவும், விஞ்ஞான விளக்கமும், பயிற்சியும், பரிச்சயமும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகி விட்டன.

பொதுவாகவே தமிழ்ப் பகுதிகளில் விஞ்ஞான விளைவுகளின் பயன்பாடும், அவை பற்றிய அறிவும் மிகக்குறைவாகவே உள்ளன. தென்னிலங்கைப் பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது கூட, தமிழ்ப் பிரதேசங்கள் இது விடயத்தில் மிகவும் பின்தங்கியே உள்ளன.

அவ்வாறிருக்கையில், ஏனைய நாடுகள் கண்டுவரும் விஞ்ஞான வளர்ச்சியுடன் ஒப்பிடுவதற்குத் தகுதியற்ற நிலையிலேயே தமிழ்ப் பிரதேசங்கள் 'விஞ்ஞான வரட்சி' கண்டுள்ளன எனலாம். இந்நக் கவலைக்குரிய நிலைக்குப் போரும், அரசின் பாகுபாடும் முக்கிய காரணங்கள் என்பதனை மறுக்க முடியாது.

எனினும் அவற்றைக் கூறிக்கொண்டு நாம் வாளாதிருப்பின், எமது வாழ்க்கை மட்டுமன்றி, அடுத்த சந்ததியின் எதிர்காலமும் இருள் சூழ்ந்ததாகிவிடும். ஆகையால் விஞ்ஞானம் குறித்த விழிப்புணர்வையும் அறிவையும் மாணவர்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசிய தேவை தமிழ்ப் பகுதிகளில் தோன்றி உள்ளது.

அந்தத் தேவையை ஓரளவேனும் நிறைவேற்றத் தோற்றுவிக்கப்பட்டது தான் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம். விஞ்ஞான அறிவையும் பயிற்சியையும் இளம் சந்ததியினரிடம் பரப்பும் பணியில் சங்கம் இன்னும் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன.

அதன் பணிகள் மேலும் விரிவடைய வேண்டும்; விஸ்தரிக்கப்பட வேண்டும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் விஞ்ஞான அறிவைப் பெருக்குவதில் விசேட கவனம் செலுத்தப்படுவதோடு எமது பிரதேசத்தின் வளங்களைத் தக்க முறையில் இனங்காணவும் அவற்றைப் பயன்படுத்தவும் உதவும் ஆராய்ச்சிகளிலும் அக்கறை செலுத்தப்பட வேண்டும். இதற்கான நிதி வளங்களை உள்ளூர் மட்டத்திலேயே திரட்ட வேண்டிய தேவை இருப்பதால் மக்களின் ஆதரவு சங்கத்தினருக்குப் பெரிதும் தேவை.

விஞ்ஞான ஆய்வுகளைச் செய்வதோடும் அவற்றை வெளியிடுவதோடும் நின்றுவிட்டால் அந்த ஆராய்ச்சிகளால் சமூகப் பயன்பாடு பெரியளவில் இருக்காது. எமது பிரதேசம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை பரீட்சித்துப் பார்க்குமளவுக்கேனும் விஞ்ஞான சங்கத்தின் பணிகள் விரிவடைந்தால் மட்டுமே ஆராய்ச்சிகளால்பயன்கிடைக்கும்

எமது பிரதேச மக்களைப் பாதிக்கும், தொழில் உற்பத்திகளைப் பாதிக்கும் விடயங்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகளையும் ஆராய வழி பிறக்க வேண்டும்.

நாளை ஆரம்பமாகும் எட்டாவது வருடாந்த அமர்வுகளின் பின்னர், மேற்கண்ட விரிவாக்கப் பணிகள் குறித்து சங்கத்தினர் கவனம் செலுத்துவர் என நம்புகிறோம்.

# பச்சிலைப்பள்ளி மோதலின் போது மக்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்

தற்போதைய யுத்தம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஒன்றினைக் குறிப்பிட்ட நாளில் நடத்த முடியாத சூழ்நிலையைத் தோற்றுவித்துவிட்டது.

கடந்த 27 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் திருமணத்தின் கதாநாயகனான பளையிலுள்ள மாப்பிள்ளையும் அவரது உறவினர்களும் யாழ். கச்சேரியடியிலுள்ள மணமகளின் வீடு நோக்கி வரும் போது இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டினால் காயமடைந்தனர்.

இதனால் குறிப்பிட்ட திருமணத்தை அன்று நடத்த முடியாமற் போய்விட்டது.

சம்பவதினம் மாப்பிள்ளையை அழைக்கப் பெண் வீட்டார் பளை செல்வது என்று ஏற்பாடாகி இருந்தது. பெண் வீட்டாரின் வரவை எதிர்பார்த்து மாப்பிள்ளை காத்திருந்தார். அப்பொழுதுதான் அந்தச் செய்தி மாப்பிள்ளை வீட்டாருக்குக் கிடைத்தது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கடும் மோதல்கள் நடைபெறுவதனால் எங்கும் செல்ல முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் பெண் வீட்டார் வந்து சேரவில்லை. ''நாங்கள் யாழ்ப்பாணம் செல்வோம்'' என்று கூறி உறவினர்கள் சகிதம் வாடகைக்கு அமர்த்திய கார் ஒன்றில் மாப்பிள்ளை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டார்.

இதேவேளை பெண் வீட்டாரும்மாப்பிள்ளை அழைக்க எழுதுமட்டுவாளுக்கு அப்பால் செல்லமுடியாது எழுதுமட்டுவாள் பகுதியில் காத்திருந்துவிட்டுத் திரும்பிவிட்டனர்.

தாலி கட்டுவதற்கான நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. கார் பறந்து கொண்டிருந்தது. ஆனால் இவர்களது கார் இத்தாவிலுக்கு அப்பால் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. கார் திரும்பி மீண்டும் புலோப்பளை நோக்கிச் சென்றது.

கார் அரசர்கேணி ஆனைவிழுந்தான் பகுதியை நெருங்கிய பொழுது திடீரெனத் துப்பாக்கிச் சன்னங்கள் காரைநோக்கிப் பாய்ந்தன.

கார்ச்சாரதி, மாப்பிள்ளை, மாப்பிள்ளையின் சகோதரன் சகோதரனின் குழந்தை, மாப்பிள்ளையின் சிறிய தாயார் எனத் திருமணவைபவத்துக்காகக் காரில் சென்ற பலரும் காயமடைந்தனர்.

கார் நிறுத்தப்பட்டது. இரத்தம் தோய்ந்த நிலையில் மாப்பிள்ளை வெளியே வந்தார். அவரது மாப்பிள்ளை வேட்டி, சால்வை, சேர்ட் எல்லாம் ஒரே சிவப்பு நிறமாகக் காட்சி அளித்தது.

வெளியே வந்தவர் கைகளை உயர்த்தியவாறு தாங்கள் யார் என்பதை அங்கிருந்தவர்களுக்கு அடையாளம் காட்டினார்.

இதனைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நிறுத்தப்பட்டதுடன் பளையை நோக்கிச் செல்லுமாறு அங்கு நின்றவர்களால் உத்தரவிடப்பட்டது.

காரின் உள்ளே கார்ச்சாரதி முருகேசு கந்தசாமி (வயது 53), மாப்பிள்ளையான செல்லையா நந்தகுமார் (வயது 36) மாப்பிள்ளையின் சகோதரரான செல்லையா இந்திரகுமார் (வயது 39),

- கேசரி -

அவரது மகள் இந்திரகுமார் நிலாஜினி (வயது 6), மாப்பிள்ளையின் சிறியதாயாரான திருமதி கணேசன் பரமேஸ்வரி (வயது 38) காயமடைந்த நிலையிலிருந்தனர்.

இவர்கள் அனைவரும் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாப்பிள்ளையான செ நந்தகுமார் அம்புலன்ஸ் மூலம் கடந்த சனிக்கிழமை யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்

### மணமகன் ஆஸ்பத்திரியில்

அவர் தனது அனுபவங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

திருமணக் கோலத்தில் இருந்த எனக்கு இவ்வாறான ஒரு நிலை ஏற்படும் என்று நான் நம்பவில்லை எல்லாம் ஒரு கனவு போல நடந்து முடிந்து விட்டன.

எங்கள் புலோப்பளை வீட்டிலிருந்து தற்போது எல்லோருமே வெளியேறி விட்டார்கள். வாடகைக்கு போடப்பட்ட திருமணப்பந்தல் மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்ட கதிரைகள், கலியாண வீட்டுக்கெனச் செய்யப்பட்ட சிற்றுண்டிகள், உணவுப் பொருள்கள் எல்லாம் அப்படியே வீட்டிலேயே விடப்பட்டுள்ளன.

நான் காயங்களுடன் இங்கு அனுமதிக்கப்பட்டிருப்பதை அறிந்த திருமணப்பந்தல் உரிமையாளர் என்னிடம் வந்தார். பந்தல் வாடகை பற்றிக் கதைத்தார். இனிக் கதிரைக்காரர்களும் வருவார்கள்— என்றார்.

இவருடன் காயமடைந்த கார் உரிமையாளரான முருகேசு கந்தசாமி (வயது 53) என்பவரை எமது செய்தியாளர் சந்தித்தபோது மருதங்கேணி உதயன் பத்திரிகை முகவராக இருந்த தாம் தற்பொழுது பளை உதயன் முகவராக இருப்பதாக தம்மை அறிமுகப்படுத்தினார்.

திருமண வீட்டுக்கான காரைத் தாமே ஓட்டிச் சென்றதாக அவர் கூறினார்.

அங்கு நடைபெற்ற சம்பவங்களை விவரித்ததுடன் இச் சம்பவத்தில் தமது காருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் கார் இன்னமும் அந்த இடத்திலேயே நிற்பதாகவும் அவர் கூறினார்.

பளையிலிருந்து நேற்றுக் காலை மோட்டார்சைக்கிள் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தாம் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பளையிலிருந்து நேற்றுக் காலை காயமடைந்த மேலும் இரு சகோதரர்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பளை மகாவித்தியாலய மாணவர்களான கோபால பிள்ளை சுகந்தன் (வயது 14), கோபாலபிள்ளை சிவகுமார் (வயது 17) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

பளையில் தொடர்ந்து இடம்பெறும் தாக்குதல்களுக்கு அஞ்சி அங்குள்ள வீடொன்றில் தஞ்சமடைந்த வேளை கடந்த 29 ஆம் திகதி இரவு அந்த வீட்டின் மீது விழுந்து வெடித்த ஷெல்லினால் இவர்கள் இருவரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இவர்களது தந்தையான பளை நகரில் தேநீர்க் கடை நடத்தி வந்த வல்லிபுரம் கோபாலபிள்ளை (வயது 52) என்பவர் பலியானார்.

தந்தையைப் பலிகொடுத்த இந்த இருவரும் தாயின் துணையுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரணமடைந்த தமது தந்தையாரின் இறுதிக் கிரியைகளை இந்து மயானத்தில் செய்ய முடியாது போனதாகவும்—

புலோப்பளையிலுள்ள கிறிஸ்தவ சேமக்காலையில் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர்கள் கண் கலங்கத் தெரிவித்தனர்.

(இ-க)

## நாளை

பங்குனி 23

புதன்கிழமை

திதி: பிரதமை

முன்னிரவு 11.05 வரை

நட்சத்திரம்: ரேவதி

பிற்பகல் 3.17 வரை.

சுபநேரம்: 4.38 - 6.08

ராகுகாலம்: 12.08 - 1.38

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

உன்னுடைய கடிகாரத்தைப் பாக்கெட்டில் வைப்பதுபோல், உனது கல்வியையும் மறைவாக வைத்துக்கொள். அது இருப்பதைக் காட்டுவதற்கு அவசியம் இல்லாத போது வெளியே எடுக்காதே.

- செஸ்டர்பீல்ட்

## தவக்காலச் சிந்தனை

(இருபத்தெட்டாம் நாள்)

அவலங்கள் தொடர்கதையாகிவிட்ட அவனியில் வாழும் நாம் அமைதியை நாடி அலைகின்றோம். உடல் நோய் ஒரு புறம் உளநோய் ஒரு புறம், ஆன்மீக நோய் ஒரு புறம் என நோயுற்ற மனிதர்களாக மருத்துவரை நாடி ஓடுகிறோம். வாழ்க்கைப் பாதையில் அனுதினமும் ஆண்டவனை நோக்கிக் கதறி வேண்டுகின்றோம்.

நமது எல்லா விதமான நோய்களையும் குணமாக்கி விடுதலை அளிப்பவர் இயேசு ஒருவரே. அன்று தாம் வாழ்ந்த காலத்தில் தம்மைத் தேடி வந்த மக்களின் விசுவாசத்தை புகழ்ந்தவராய் அவர்களுக்கு மன்னிப்பளித்து புதுவாழ்வு கொடுத்தார்.

அருள்தரும் காலமாகிய இப்புனித தவக்காலத்தில் வாழும் நாமும் இயேசு தரும் அருள்வாழ்வைப் பெறுவதுடன் நமது அயலவரும் அவரது அருளைப்பெற்றிடத் துணைக்கரம் கொடுத்து வாழவேண்டும் என இறைவன் விரும்புகின்றார்.

முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலமற்றவர் நலமாகாது இருந்ததை கண்ட இயேசு அவரிடம்.

''எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்'' (யோவான் 5:8) என மொழிந்து நலமளித்தார்.

நாம் சந்திக்கும் நமது அயலவர்களில் எத்தனை பேர் உதவி செய்வாரின்றி எழுந்து நடக்க முடியாதவர்களாய் வாழ்கின்றனர். பாவச் சேற்றில் மூழ்கி கரையேற வழி தெரியாது வாழும் மக்களின் அவலங்கள் அகன்றிட துணைக்கரம் கொடுப்போராய் வாழ்ந்திடுவோம். அன்புக்காக, அமைதிக்காக ஏங்கும் உள்ளங்களின் துயரகற்றும் தூதுவர்களாக நம் சமூகத்தில் கரம் கொடுத்து உதவிடுவோம். எல்லாவித அடிமைத்தனத்திலிருந்தும் இயேசுவின் வல்லமையால் விடுபட்டு இறைவனின் பிள்ளைகளாக வாழ்வோம்.

S.G. றூபவசந்தினி
(கோப்பாய்)

## அதிசய நாய்க்குட்டி

தென்மராட்சி ஏப்ரல் 4

சாவகச்சேரிப் பகுதியில் அதிசய நாய்க்குட்டி ஒன்று பிறந்துள்ளது

முகத்தில் தும்பிக்கை போன்ற உருவ அமைப்பிலும் பற்கள் இரண்டு தந்தம்போல வெளியே வந்த நிலையிலும், வால் நீளமாகவும்இந்த நாய்க்குட்டி காணப்பட்டது

பிறந்த சிறிது நேரத்தில் இறந்த இந்த நாய்க்குட்டியை பெருமளவு மக்கள் பார்வையிட்டனர். [இ-117]

## இலவச சீருடைத் துணிகள்

வலி. தெற்கு ஏப்ரல் 4

வலிகாமம் கல்விவலயபாடசாலை மாணவர்களுக்கு இந்த ஆண்டுக்கான சீருடைத் துணிகள் இவ்வாரம் வழங்கப்படும்.

இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளுக்கும், புதன்கிழமை உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கும் வெள்ளிக்கிழமை சங்கானைக் கோட்ட பாடசாலைகளுக்கும் இலவச சீருடைத் துணிகளை வழங்க கோட்டக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஒழுங்கு செய்துள்ளனர். (இ-152)

## இருவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பாலச்சந்திரலால் பிரதீபன் (திருநெல்வேலி, தாளையடி), பொன்னம்பலம் சுதாகரன் (நாச்சிமார் கோயிலடி, புத்தூர் கிழக்கு) ஆகிய இருவருமே காங்கேசன்துறைப் பொலிஸாரால் நீதிவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும்வரை சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும்—

எதிர்வரும் 17 ஆம் திகதி மன்றின் பார்வைக்காக இருவரையும் மன்றில் ஆஜர் செய்யுமாறும் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

(ஜ-9)

# சின்னஞ்சிறு . விளம்பரம்

## கண்டெடுக்கப்பட்டது

01-04-2000 சனிக்கிழமையன்று நாச்சிமார் கோயிலடியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்புகளுக்கு: K.இராசேந்திரம் வைரமுத்து [மாமா] கடை குளிர்ச்சோலை, நாச்சிமார் கோயிலடி. [75063]

## தவறிவிட்டது

கொக்குவில் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அல்லது கே. கே. எஸ். வீதிக்கும் பலாலி வீதிக்கும் இடையில் கைசெயின் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இ. விஜய கோபால் மில்க்வைற் தொழிலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (75038)

அமிர்தலிங்கம் றெஜிந்தன் என்பவரின் விசேட அ.அ. NO. 091034586, பாஸ் என்பன கரம்பகத்திற்கும் மிருசுவில் சந்திக்கும் இடையில் 30-03-2000 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மிருசுவில் உபதபால் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (75039)

அந்திரான் சண்டிலிப்பாய் எனும் இடத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் பாஸ்கரன் என்பவருடைய தே.அ.அ (இல. 811651826V), விசேட அ.அ. (இல. 0906007116) இரண்டு அடையாள அட்டைகளும் 21-03-2000 அன்று சுன்னாகச் சந்தைக்கும் சுழிபுரத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (75059)

## மணமக்கள் தேவை

1973 ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றமுள்ள லண்டனிலிருந்து வந்து நிற்பவருக்கும் பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள மணமகன்களுக்கும் அழகிய பெண்கள் தேவை. உள்நாட்டில் பணிபுரியும் மணமகள்களுக்கும் உள்நாட்டு உத்தியோக மணமகன்கள் தேவை. தொடர்பு: அபிராமி திருமணசேவை பரந்தாமன் — ராசாத்தி, ஆடியபாதம் சந்தை வீதி, முதலாம் ஒழுங்கை, கொக்குவில். (75045)

## விற்பனைக்கு

பொமேரியன் கறுப்பு, மண்ணிற ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. பரமேஸ்வரன் மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (பழைய தபாற் கந்தோர் அருகில்.) (75044)

## திருமண சேவை

சகல தொழில் துறையிலும் இளைய மணமக்கள் எம்மிடம் உண்டு. ஜாதகம், புகைப்படம் என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, இல. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (75052)

# மாமுனை சென்ற இருவர் பற்றித் தகவல் இல்லை

## மனைவிமார் உசனில் தவிப்பு

முகமாலையிலிருந்து மாமுனைக்குச் சென்ற தமது கணவன்மாரைக் கண்டுபிடித்துத் தருமாறு அவர்களது மனைவிமார் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் விண்ணப்பித்துள்ளனர்.

முகமாலையைச் சேர்ந்த நல்லையா குணசேகரம், இளையகுட்டி செல்வராசா ஆகிய இருவரும் கடந்த 26 ஆம் திகதி தமது சொந்தத் தேவைகளின் பொருட்டு மாமுனைக்குச் சென்றார்கள். இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமல் இவர்களது குடும்பத்தினர் இடம்பெயர்ந்து பெரும் சோகத்துடன் உசனில் தங்கியிருக்கிறார்கள். (இ-5)

# நீர்வேலி வீதி குண்டும் குழியுமாக

நீர்வேலி, தெற்கு பூதர் மடம் வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி பலத்த சேதமுற்று இருப்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். [இ17]

# வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை மானிப்பாய்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதி வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 10—04—2000 ஆம் திகதி மாலை 3.00 மணி வரை இவ்வலுவலகத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 11-04—2000 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
04. கேள்விகள் 11—04—2000 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
06. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% வைப்பிலிடல் வேண்டும்.
07. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 02. சட்டுடை அராசடி வீதி (அன்னைவேளாங்கண்ணி) (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 03. ஆனந்தா வீதி (பகுதி 1) (தார் வீதி திருத்தம்) | 1,000/- | 200/- |
| 04 பொமோறிபல் வீதி (தார் வீதி திருத்தம்) | 3,000/- | 200/- |
| 05 காடாப்புலம் ஆஸ்பத்திரி வீதி(தார் வீதி திருத்தம்) | 3,000/- | 200/- |
| 06. மாதகல் பிள்ளையார் வீதி (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 07 விளாப்போடை வீதி (தார் வீதி திருத்தம்) | 2 000/- | 200/- |
| 08. அடைக்கலநாயகி வீதி (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 09 சோதி வேம்படி வீதி (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 10 சென்ஜேம்ஸ் வீதி (தார் வீதி திருத்தம்) | 3,000/- | 200/- |
| 11. மாப்பியன் மில் வீதி (தார் வீதி திருத்தம்) | 2,000/- | 200/- |
| 12. சாவற்கட்டு வைரவர் கோயில் வீதி (தார் வீதி, திருத்தம்) | 2,500/- | 200/- |
| 13. மாதகல் விளான் வீதி (சென் அந்தனீஸ் வீதி) (தார் வீதி, திருத்தம்) | 1,500/- | 200/- |
| 14. நவாலி சங்கயான் வீதி (கிறவல் வீதி, திருத்தம் | 500/- | 200/- |
| 15. காக்கைதிவு குடியேற்றத்திட்ட வீதி (கிறவல் வீதி திருத்தம்) | 500/- | 200/- |
| 16 சாந்தைக்குடியேற்றத் திட்ட வீதி (கிறவல் வீதி, திருத்தம்) | 1,000/- | 200/- |
| 17. முருங்கயப்புலம் வீதி (சவாரி வீதி) (கிறவல் வீதி, திருத்தம்) | 1,000/- | 200/- |
| 18. சகாயபுரம் உள்ளக வீதி (சவாரி வீதி) (கிறவல் வீதி, திருத்தம்) | 500/- | 200/- |
| 19. நாச்சிமார் கோவில் முன் வீதி (சவாரி வீதி) (கிறவல் வீதி, திருத்தம்) | 1,000/- | 200/- |
| 20 சாந்தை பாலக்கட்டை வீதி (சவாரி வீதி) (கிறவல் வீதி, திருத்தம்) | 500/- | 200/- |
| 21. நவாலி சென் பீற்றர்ஸ் ச. ச. நிலையக் கட்டடம் அமைத்தல் | 3,000/- | 200/- |
| 22. பண்டத்தரிப்பு உப அலுவலக தளபாடங்கள் அலுமாரிகள் திருத்தம் செய்தல் | 500/- | 200/- |

**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
ஜே.பி., யூ. எம்., தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி/11631)

# நிவாரணம் இல்லை

தென்மராட்சி, ஏப்ரல் 4

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நலநோம்பு நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு, எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு நாள் மட்டும் சமைத்த உணவு வழங்கப்பட்டதாகவும் பின்னர் அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## முன்பள்ளி பாலர் ஆசிரியராக பயிற்சி

தபால் வழி ஆறுமாதப் பயிற்சி

க. பொ. த. [சா/த] கடைசித் தகைமை

விவரங்களுக்கு:
**பாலர் ஆசிரியர் சங்கம்,**
கொக்குவில்.

(74843)

# கூட்டுறவுப் பணிமனை திறப்பு விழா

அரியாலை, ஏப்ரல் 4

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியில் மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்துக்கெனக் காணியுடன் கொள்வனவு செய்யப்பட்ட பணிமனைத் திறப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடப் பணிமனையைச் சம்பிரதாய பூர்வமாகத்திறந்துவைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாகத் பிராந்திய ஆணையாளர் ஏ.சி. செபநாயகம், யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு வரவேற்புரையை நிகழ்த்துவார்.

இறுதியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு. கணேசமூர்த்தி நன்றி உரை நிகழ்த்துவார். (இ-17)

# போஷாக்கு வாரம்

சண்டிலிப்பாய், ஏப்ரல் 4

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போஷாக்கு வாரத்தை முன்னிட்டு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக "போஷாக்கை மேம்படுத்த இரும்புச்சத்துத் தேவை" என்ற தொனிப் பொருளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினால் இது பற்றிய கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. (இ-135)

# கட்டடவேலை பூர்த்தி

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய கட்டடத்தின் முதலாம் கட்ட வேலை 15 லட்சம் ரூபா செலவில் பூர்த்தியடைந்துள்ளது.

மேலும் இரண்டாம் கட்ட வேலை 15 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வருட நடுப்பகுதியில் கட்டடவேலைகள் யாவும் முழுமையாக சீர் செய்யப்படும் என்றும் நகரசபை செயலாளர் பொ. கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டடத்துக்கான நிதியை வட பகுதிக்கான மீளக்குடியமர்வு அதிகார சபை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-109)

# உடற்பயிற்சிப் போட்டிகள்

வலி. தெற்கு, ஏப்ரல் 4

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும். (இ-152)

# விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

உயர் தொழிநுட்ப நிறுவனம், மாணவர்களிடையே நடத்த உள்ள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும். நிறுவன அதிபர் ரி. இராஜரட்ணம் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறும். [இ-8]

# காணாமற்போன படையினரின் பெற்றோர் உண்ணாவிரதம் இருப்பர்

கொழும்பு, ஏப்ரல் 4

விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் உள்ள படையினரை விடுதலை செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி காணாமல்போன படை வீரர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் புத்தாண்டு தினமான இம்மாதம் 13ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

தமது விடுதலை தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தில் குதிக்கப்போவதாக புலிகளின் வசம் உள்ள படைவீரர்கள் அறிவித்துள்ள வேளையில் அவர்களின் பெற்றோர்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

(இ-7)

# பொ. ஐ. மு- ஐ. தே. க. பேச்சு மிகவும் சுமுகமான முறையில்

அரசமைப்புச் சீர் திருத்தம் தொடர்பான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தூதுக் குழுவுக்கும், ஐ. தே. கவுக்கும் இடையிலான பேச்சுக்கள் நீண்ட நாள்கள் இடம்பெறும். ஏற்கனவே நடைபெற்ற பேச்சுக்கள் உறுதியாக அமைந்துள்ளன–

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

இருதரப்புக்கும் இடையில் இதுவரை நடந்த கலந்துரையாடல்களில்பலவிடயங்களில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

பேச்சுகள் உடனடியாக முடிவடையாது பல மாதங்கள் கூடச் செல்லலாம் ஆனால் நல்ல பலனைத் தரும் என நம்புகிறோம்.

பேச்சுகள் உறுதியாக முன்னெடுக்கப்படுகின்றன—என்றார்.

(இ-3)

# சிரேஷ்ட அமைச்சர்களுக்கு குண்டு துளைக்காத வாகனம்

## இராஜகிரிய தாக்குதலை அடுத்து நடவடிக்கை

கொழும்பு, ஏப்ரல் 4

சிரேஷ்ட அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்குவழங்கவெனகுண்டு துளைக்காத 20 சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இராஜகிரியவில்அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகவும்—

இதற்கென 12 கோடி 50 லட்சம் ரூபாவை அரசுஒதுக்கியுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரிகளின் பாவனைக்காக இதே வகையான நான்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

அதே சமயம்— ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து தீர்வையற்ற வகையில் பஜரோ, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

# ஷெல்கள் வீழ்ந்து வெடித்தபோது உடுத்த உடையுடன் ஓடிவந்தோம்

## கச்சார்வெளியிலிருந்து இடம்பெயர்ந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

எமது வீட்டுக்கு அருகே திடீரெனச் ஷெல் சத்தங்கள் கேட்டன. எதுவும் செய்ய முடியாத நிலையில் அடையாள அட்டையை மட்டும் எடுத்துக்கொண்டு உடுத்த உடுப்புடன் இடம்பெயர்ந்தோம்.

கச்சார் வெளியில் இருந்து இடம்பெயர்ந்த 4 பிள்ளைகளின் தாயான பாலசிங்கம் குலவேணி (வயது 53) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மிருசுவில் தேவாலயத்தில் தங்கியுள்ள அவர் தமது அனுபவம் குறித்து மேலும் கூறியதாவது:-

நானும் எனது மகளும் அவரது பிள்ளைகளும் வீட்டில் படுத்திருந்தோம். இரவு 12 மணியளவில் திடீரெனச் ஷெல் சத்தங்கள் கேட்டன.

எமது வீட்டைச் சுற்றிச் ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன.

காலை ஓரளவு ஷெல் சத்தம் ஓய்ந்ததும், உடுத்த உடுப்புடன் அடையாள அட்டையை மட்டும் எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்து புறப்பட்டோம்.

அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போனோம். போகும்போதும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

குழந்தைப் பிள்ளைகளை அணைத்தபடி நிலத்தில் குப்புறப் படுத்துப்படுத்து ஒருவாறு மாதா கோயிலை அடைந்தோம். அங்கிருந்து மிருசுவிலுக்கு வந்தோம் என்றார்.

(இ-3)

# 10 வயது மாணவியை தாக்கியதாக வழக்கு

நெல்லியடி, ஏப்ரல் 4

தண்டிக்கப்பட்டமாணவியை சமாதானமான முறையில் மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு நாம் கல்லூரி அதிபரிடம் கோரிக்கை விடுத்தோம். அவர் அதனை மறுத்ததனாலேயே நீதிமன்றில் நாம் இந்த வழக்கை தாக்கல் செய்தோம்.

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலைய கான்ஸ்டபிள் பி. கோடீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு மாணவியான முனுசாமி அவக்கை (வயது 10) என்பவர் ஆசிரியர் ஒருவரினால் தாக்கப்பட்டதாகவும் பாடசாலையில் இருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவித்து இந்த வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில், நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நடைபெற்ற சமயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி குட்டித்தம்பி றஞ்சிதமலரும் வேறு ஆசிரியர்களும் ஆஜரானார்கள்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் இம்மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# பொருள்களை இறக்குவதில் சாதனை

பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்று முன்தினம் மட்டும் குமண கப்பலில் இருந்து ஆயிரத்து 100 மெற்றிக் தொன் பொருள்கள் இறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபைக்குரிய மின் சாதனங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கான பொருள்கள் மற்றும் நிவாரணப் பொருள்கள் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் என்பன இவ்வாறு ஒரேநாளில் இறக்கப்பட்டுள்ளன–

எதுவித அடிப்படை வசதியும் இல்லாத நிலையில் இறங்குதுறை ஊழியர்கள் இவ்வாறு ஒரேநாளில் அதிக அளவிலான பொருள்களை இறக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-7-10)

# தேவாலயம் திருத்தப்படுகிறது

சேதமடைந்த நிலையில் உள்ள பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயம் தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தேவாலயத்தைத் திருத்துவதற்கான நிதியை வடமாகாண புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு வழங்கியுள்ளது.

(க-51)

# ஆலயத் திருட்டு

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயிலில் இருந்த 'பெயின்ட்' வகைகள் மற்றும் கிடாரங்கள் என்பன கடந்த வாரம் திருடப்பட்டுள்ளன. கோயிலின் பொருள்கள் வைக்கும் அறையை உடைத்துத் திருடர்கள் மேற்படி பொருள்களை கையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

நெடுந்தீவு மத்தியில் உள்ள கடை ஒன்றை உடைத்து அங்கிருந்த பொருள்களையும் வீடு ஒன்றில் துவைத்துக் காயவிட்டிருந்த ஆடைகளையும் கூடத் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

(க-111)

# ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு ஏப்ரல் 15 ஆம்திகதி கூடுகின்றது

கொழும்பு, ஏப்ரல் 4

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ. தே. க. கடைப்பிடிக்கவிருக்கும் உத்திகள் குறித்து ஆராய அக்கட்சியின் செயற்குழு எதிர்வரும் 15ஆம் திகதி கூடவிருக்கின்றது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இச்செயற்குழுக் கூட்டத்தில் வேட்பாளர் நியமனம் தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய உத்தி, தேர்தல் விஞ்ஞாபனம் ஆகியன தொடர்பாக ஆராயப்படவிருக்கின்றன.

ஐ. தே. க. எந்தக் கட்சியுடனும்கூட்டுச்சேராதுதனித்துப் போட்டியிடும் என்று கட்சித் தலைவர்ஒருவர் தெரிவித்தார்.

(இ-3)

# அன்ரனோவ் விமான சிதைவுகள் வில்பத்துப் பகுதியிலும்!

கொழும்பு, ஏப்ரல் 4

அனுராதபுரம் பகுதியில் கடந்த வாரம் வீழ்ந்து நொருங்கிய அன்ரனோவ் விமானத்தின் சில சிதைவுகள் வில்பத்துப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குசன்புர, மல்கம் பெவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமவாசிகளே இது குறித்து பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

(இ-8)

# உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் மே மாதம் 29இல்

கொழும்பு, ஏப்ரல் 4

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்தமாதம் 29ஆம் திகதி பாரிஸில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவும்—

ஐ. தே. கவுடன் இணக்கப்பாட்டுக்கு வரவும் — அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

கூடுதலான உதவிகளைப் பெறுவதற்கு இந்த இரு விடயங்களிலும் அரசு வெற்றி பெறவேண்டும் என்றும்—

இந்த விடயங்களில் அரசு தோல்வி கண்டால் உதவிகள் தாராளமாகக் கிடைக்காது என்றும் — மேலும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் யுத்தம் தொடர்ந்து நடப்பதால் உதவி வழங்கும் நாடுகள் உதவிகளை வழங்குவதில் பின்னடிப்பதாகவும் —

இந்நிலையைச் சமாளிக்க அரசு பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது.

கடந்த வருடம் பாரிஸில் நடந்த உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் கூடுதல் நிதி வழங்கப்படாதமை குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# கல்வியில் மட்டுமல்ல சகலதுறையிலும் வளரும் பாடசாலைக்கு உதவுவேன்

## திறந்தவெளி அரங்குத் திறப்புவிழாவில் அரச அதிபர்

நெல்லியடி ஏப்ரல் 4

''வடமராட்சிப் பகுதியில், கல்வியில் மட்டுமன்றி, சகல நடவடிக்கைகளிலும் முன்னணியில் திகழும் இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை காலப்போக்கில் நிறைவேற்றுவேன்''

இவ்வாறு கரணவாய் பொன்னம்பல வித்தியாலய திறந்த வெளி அரங்கு திறப்பு விழாவிலும், வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் க. பொன்னையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் தொடர்ந்து பேசிய யாழ். அரச அதிபர் தெரிவித்ததாவது:-

பலவருடங்களுக்குப் பின்னர் இப்படியானநிகழ்வுகளை நான்—அதுவும் வடமராட்சியில்—பார்க்கின்றேன். 83 ஆம் ஆண்டுக்கு பின்னர், புத்தாயிரமாம் ஆண்டில் பள்ளிச் சிறார்களின் உற்சாகத்தை, வடமராட்சியில் பார்ப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போதய நாட்டுச் சூழ்நிலையிலும் கூட, நல்ல நெறியாள்கையில், மாணவசிறார்களை அதற்கு அமைவாகக் கொண்டு செல்லுகின்ற அதிபர் பொன்னையாவின் சேவை கல்வித்திணைக்களத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது.

வடமராட்சியில் மாணவர்கள் மிகவும் நல்ல முறையில் நல்ல வழி நடத்தலில் செல்கின்றார்கள். இதனை விட, வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சிவராஜா, தேவையானவற்றை இனம் கண்டு கூறுபவர். அப்படியானவர்களின் ஆலோசனை, வழி நடத்தலுக்கு ஏற்ப, நாமும் எமது பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.

இப்பாடசாலை வரலாற்றில் பாடசாலை விருத்திக்கு அமைய, நல்ல விளையாட்டு மைதானமும் கிடைக்கப்பெற்றது சாலப்பொருத்தமானது.

எம்மால் சில தேவைகளை உடனடியாக செய்ய முடியாத நிலை இருக்கின்றபோதிலும், வடமராட்சியின் மிக முக்கிய கேந்திரமான இப்பாடசாலை, பல திட்டங்களை உருவாக்கும்போது. அதன் வளர்ச்சியில் நானும் பங்கு கொண்டு ஒத்துழைப்புகளை வழங்குவேன் — என்றார்.

விழா ஆரம்பிக்க முன்னராக, அரச அதிபரும், பாரியாரும், மூத்த விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை, வழிபாட்டில் கலந்து கொண்ட பின், வித்தியாலய மாணவர்களின் ''பான்ட்'' வாத்திய இசையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திருமதி சுபத்திரா தேவி சண்முகநாதன் சான்றுகளை வழங்கினார்.

(இ-109)

# களுத்துறை கைதிகளின் வழக்குகள்; துரிதமாக விசாரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்ரல் 4

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த இரு வாரங்களில் 20 பேர் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, பதுளை ஆகிய மாவட்டங்களில் உள்ள மேல் நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

மேலும் பலர் தொடர்பான வழக்குகள் விரைவில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-க-3)


தாவடி

## ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் — 04–04–2000
சப்பறம் — 16–04–2000
இரதோற்சவம் — 17–04–2000
தீர்த்தோற்சவம் — 18–04–2000

தினசரி காலை 9.30 மணி முதல் பகல் திருவிழாவும் மாலை 4.00 மணி முதல் இரவுத் திருவிழாவும் ஆரம்பமாகி நடைபெறும்.

குறிப்பு:- அம்பாளின் இராஜ கோபுர திருப்பணிக் கைங்கரியம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. உங்கள் ஒத்துழைப்பை விரைந்து வழங்கி விரைவில் இப்பணி நிறைவுபெற உதவுங்கள். நன்றி.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

ஆலய முகாமையாளர்
கண்ணன் ஐயர்,
ரவி ஐயர்.

தாவடி தெற்கு,
கொக்குவில். [75056]


## கண்ணீர் அஞ்சலி

கலைப்பீட மூன்றாம் வருட மாணவன்
துரைராசா அருந்தவசீலனின்
அன்புத்தாயார்

### திருமதி துரைராசா கனகம்மாவின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தெய்வபுலேந்திரா குடும்பத்தினர்.
நெல்லியடி. கரவெட்டி. 75058)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 — 01 — 1931
உதிர்வு 04 — 04 — 1999

### திருமதி பிரான்சிஸ்கா டானியல்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.
(யோவான் 11 : 25)

உலகை நீத்துச் சென்றாலும்
உள்ளம் உம்மை மறவாது.
உறவு என்றும் தொடர்ந்து வரும்
எம் உள்ளமும் கசிந்து உருகிவிடும்.

பிரிவால் துயருறும்
மகன், மருமகள்,
சகோதரர், உற்றார்,
உறவினர்கள்.

132, பங்சால் வீதி,
யாழ்ப்பாணம். (74508)

## யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதலாவது பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா மே 8 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது..

வவுனியா வளாக அதிபர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

1989, 1990, 1991 காலப் பகுதியில் பதிவு செய்து பட்டப்படிப்பை (ஆங்கில மொழியில்) முடித்தவர்களுக்கே பட்டம் வழங்கப்படவுள்ளது.

(க-185)

## முன்பள்ளி ஆசிரியருக்கான கூட்டம்

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 4

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நுணாவில் அறவழி நிலையத்தில் நடைபெறும்.

இந்த வருடம் முன்பள்ளி மாணவர்களுக்கான புதியகல்விச்சிர் திருத்தம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட இருப்பதனால் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் இந்தக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு. பாக்கியராஜா கேட்டுள்ளார்.

(க-133)

## வேலைத்தளம்

நெல்லியடி, ஏப்ரல் 4

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, யாழ்.மில்க்வைற் தொழிலகத்தில் வேலைத்தளம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இத்தொழிற்தளத்தில் மரவேலை, இரும்பு வேலை, வயரிங், வெல்டிங் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களுள் 24 பேருக்கு இங்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக மேற்படி தொழிற்சாலையின் நலன்புரி உத்தியோகத்தர் கே. அருந்தவராஜா தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் இத்தொழிற்சாலைக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்கள் இணைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-க-109)

## சேவை

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 4

விவசாயிகளின் நன்மைகருதி சுன்னாகத்தில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று காலை முதல் இரவு 8.00 வரை தனது சேவையை நடத்தி வருகிறது.

(இ-185)


## அறிவித்தல்
### நல்லூர் வணிகர் கழகம் பொதுக்கூட்டம்

கடந்த 02 — 04 — 2000 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் வர்த்தகப் பெருமக்கள் அனேகர் சமுகம் தராத பட்சத்தில் யாப்பின் நிலைப்பாட்டின் பிரகாரம் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்பதையும் வருஷப்பிறப்பு பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு வணிகர் கழகம் அனுமதியளித்துள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

வே. திருநாவுக்கரசு,
செயலாளர்.

(75060)


## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை றோகினியம்மா

காளிகோயிலடி குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை றோகினியம்மா நேற்று முன் தினம் 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சீனியர் தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய பிஸ்கால் உத்தியோகத்தர்) யின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பூமணி, நடராசா, இராசையா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பதாம்பிகை, மகாதேவன், கமலாதேவி (வவுனியா), மகேந்திரன் ( லண்டன் ), கனகாம்பிகை, தவமணி (கனடா), புனிதவதி (ஜேர்மனி), லீலாவதி, மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் இராசநாயகம் (வவுனியா), ரஞ்சனா (கனடா), அருளானந்தம், இரத்தினசிங்கம் (கனடா), சுதாகரன் (ஜேர்மனி), உத்தமநாதன் (வீடியோ சென்ரர் இணுவில்), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் எதிர்நாயகம், ரேணுகா, கமலநாயகம் (லண்டன்), வேதநாயகம், வாசுகி (வவுனியா), மதனா, மாதினி, மைதிலி (லண்டன்), அனுசா (கொழும்பு), அகிலா, அஜந்தா, திவாகர், நீசாந்தினி, றாதிகா, பிரதீப், சுபா (கனடா) நிரஞ்சன் (லண்டன்), ரம்யா (ஜேர்மனி), ரவிசங்கர் (இணுவில் மத்திய கல்லூரி), பாலசங்கர், சங்கீதா, மேனகா (ஏழாலை சைவ சன்மார்க்கம்), துளசிகன், துவாரகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (3-4-2000) திங்கட்கிழமை மாலை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கடாகடம்பையன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
இ. உத்தமநாதன்
(மருமகன்)

காளிகோயிலடி,
குப்பிளான் வடக்கு,
ஏழாலை. (75042)

### சின்னையா மணியம் (ரிங்கர்)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மணியம் (ரிங்கர்) 02 - 04 - 2000 அன்று இந்தியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையா தம்பதிகளின் அன்புமகனும் பாலசிங்கத்தின் (இந்தியா) சகோதரனும் புஷ்பராணியின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும் அகிலன் (இந்தியா), அகிலினி, தாரணி, மாலா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03 - 04 - 2000 அன்று இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வ. புனிதவதி
(மைத்துனி)

7/1 அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். (75049)

### சாம்பசிவம் குகராஜா

பருத்தித்துறை தும்பளை வீதியைச் சேர்ந்த சாம்பசிவம் குகராஜா அவர்கள் 03-04-2000 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தியாகராஜன், விக்னராஜா, சிறிநிவாசன், சிவதாசன் சாந்திகுமார், வாகீசன் ஆகியோரின் அன்புமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-04-2000) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
K. தியாகராஜன்
[மகன்]

தும்பளை வீதி,
பருத்தித்துறை. [75046]

## இடம்பெயர்ந்த மக்களுக்கு
# உடுபுடைவைகளை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிகை

யாழ்ப்பாணம்,ஏப்.4

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பல இடங்களிலும் தங்கியிருக்கும் மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் மாற்று உடுப்புக் களை வழங்கவிரும்புவோர் உட னடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உடுத்தஉடுப்புடன் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உடை களை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உடைகளை அன்பளிப்பாக வழங்க விரும்பும் தனி நபர்கள், பொது நிறுவனங்கள் அவற்றை செயலகப் புனர்வாழ்வுப் பகுதி யில் ஒப்படைக்குமாறு செயலகத் திட்டப்பணிப்பாளர் எஸ்.மகா லிங்கம் தெரிவித்துள்ளார்.

நேரடியாகப் புனர்வாழ்வுப் பகுதியில் அவற்றை ஒப்படைக்க வசதியில்லாதவர்கள் 2774 என்ற தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் அவர்கள் குறிப்பி டும் இடத்துக்கு வந்து அவற் றைச் சேகரிக்க ஏற்பாடு செய் யப்படும் என்றும் அவர் தெரிவித் தார். (ஐ-9)

### தனங்களப்பில் புகைமண்டலம்

தென்மராட்சி,ஏப்.4

நேற்று முற்பகல் தனங்க ளப்பு பகுதியை நோக்கி நடத் தப்பட்ட கடும் ஷெல் தாக்குத லைத் தொடர்ந்து அப்பகுதியில் இருந்து பெரும் புகை மண்டலம் மேல் எழுந்ததைக் காணக்கூடிய தாக இருந்தது.

அப்பகுதியில் பெரும் பிரதே சத்தில் நெல்வயல்கள் தீப்பற்றி எரிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தனங்களப்புப் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் வயல்களில் இன் னும் நெற்பயிர்கள் அறுவடை செய்யப்படாத நிலையில் உள் ளன. (ஐ-31-117)


புதுவருடத்தை முன்னிட்டு

## லிங்கம்ஸ்

சில்க்ஹவுஸ்
(மேல்மாடி)

மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| 1 லெந் சூட்டிங் | 200/= |
| 4 சாறிகள் | 1000/= |
| 1 மாட்டின் சேட் | 200/= |
| 1 சிறுவர் மாட்டின் | 175/= |
| 1 சைனா துவாய் | 150/= |
| 1 செக் சேட் | 180/= |

மற்றும்
ரீ-சேட், காஞ்சிபுரம், மணிப்புரி, பேபி சூட் இன்னும் பல!

சொற்ப கையிருப்பே உண்டு.
விரையுங்கள்!

## லிங்கம்ஸ் சில்க்ஹவுஸ்

இல.18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.2138

✱ திருமண ஆடைத் தேர்வில் பிரசித்தி பெற்றது.
(C/11624)


## உடற் பயிற்சிப் போட்டிகள்

சங்கானைக் கல்விக் கோட் டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை புதன்கிழமை உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

### அறிவித்தல்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
நுண்கலைகள்
பட்டப்படிப்பு
(இசை/நடனம்)
இசைக்கலைமணி,
நாட்டியக்கலைமணி
கற்கைநெறிகளுக்கான
நான்காம் ஆண்டுப்
பரீட்சைகள் - 1998

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியான மாணவர்கள் தங்கள் விண் ணப்பங்களை 20-04-2000க்கு முன்னர் உதவிப் பதிவாளர் கலைப்பீட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விண்ணப்பப்படிவங்களை கலைப்பீட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு:-**
மீள் பரீட்சார்த்திகள் மீள் பரீட் சைக்கட்டணமாக ஒரு பாடத் திற்கு ரூபா 50/- வீதம் பல் கலைக்கழக சிறாப்பர் கரும பீடத்தில் அல்லது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழகக் கிளையில் செலுத்தியமைக் கான பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத் தல் வேண்டும்.

★ *பிரதான, உதவிப் பாடம் தவிர்ந்த மற்றைய பாடங்க ளுக்குத் தோற்ற விரும்பும் மீள் பரீட்சார்த்திகளும் மேற் குறிப்பிட்ட விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பாக விண்ணப் பிக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*
தெளிவில்லாத, பூரணப்படுத்தப் படாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத விண் ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப் படும்.

பதிவாளர். (C/11628)



ஆரம்பக்கல்வி பாடநெறி ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பதித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத விண்ணப்பதாரிகள் நேற்று யாழ். கல்வி அலுவலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
*படங்கள்:- காரைநகர் செய்தியாளர் ந.பாரதி*

## கைதானோர் விடுதலை

பேக்கரி ஒன்றில் வேலை செய்துகெண்டிருந்த சமயம் கடந்த 28ஆம் திகதி படையி னரால் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் உட்பட ஐந்து பேர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பேக்கரி ஊழியர்களான ரட் ணம் சந்திரகுமார், ரட்ணம் கமல குமார் ஆகிய இருவரும் கடந்த 31 ஆம் திகதியும் -

யோகநாதன் பிரபாகரன், ரட் ணம் திலகேஸ்வரன் ஆகியோர் நேற்று முன்தினமும் 30ஆம் திகதி கைதான மந்துவில் மேற் கைச் சேர்ந்த நமசிவாயம் ரவிரா ஜசிங்கம் கடந்த முதலாம் திக தியும் விடுவிக்கப்பட்டனர்.


*Sale! Sale!! Sale!!!*

## அதிசயம் ஆனால் உண்மை!!

ஒரு லெந் சூட்டிங் விலை - 150/= மட்டுமே!
மேலும் புடைவைத் தினுசுகள் அனைத்துக்கும் விசேட சலுகை உண்டு. கையிருப்பு குறைந்தளவே! எனவே உங்கள் புதுவருட ஆடைத் தெரிவுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

## CITY TEX & TAILORS

புடைவைத் தினுசுகளின் இராஜமுத்திரை

தேவை:- *நன்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.*

*73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.*
T.P: 2671 (C/11637)


உ

## யாழ். அத்தியடி
### ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்திப் பிள்ளையார் கோவில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2000

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் (துவஜா ரோகணம்) | - | 05-04-2000 புதன்கிழமை நண்பகல் 12.00 மணி. |
| சப்பறத் திருவிழா | - | 12-04-2000 புதன்கிழமை மாலை 5.00 மணி. |
| தேர்த்திருவிழா | - | 13-04-2000 புதுவருட தினத்தன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி. |
| தீர்த்தத் திருவிழா | - | 14-04-2000 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி |
| வசந்தோற்சவம் | - | 15-04-2000 சனிக்கிழமை மாலை 5.00 மணி |

மஹோற்சவக் குருக்கள்: சிவாச்சாரியமணி சிவஸ்ரீ நா. யோகேஸ்வரக் குருக்கள்

05-04-2000 புதன்கிழமை தொடக்கம் 13-04-2000 வியாழக்கிழமை வரை ஆசிரியர் செஞ்சொற் செல்வர் திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

அன்பளிப்பு:- நியூ பிரியங்கா ஜுவல்லர்ஸ்
177A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021-2148

இங்ஙனம்,
பிள்ளையார் பணியில்,
கோயில் நிர்வாகம். (75063)

### யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனம்
### மெய்வன்மைப் போட்டி

| | |
|---|---|
| இடம்:- | முத்துத்தம்பி விளையாட்டு மைதானம் |
| காலம்:- | 05-04-2000<br>06-04-2000 |
| நேரம்:- | பிற்பகல் 1.00 மணி |

உயர் தொழில்நுட்ப நிறுவன முழு நேர, பகுதி நேர மாணவர்கள் அனைவரையும் இன்று (04-04-2000) செவ்வாய்க்கிழமை உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு வருகை தந்து போட்டிகள் பற்றிய விவரத்தைப் பெற்று போட்டி களில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(75066) - *இயக்குநர்*

### கொக்குவில் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 16-04-2000 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்ட பத்தில் அதிபர் திரு. பொ. கமலநாதன் தலைமையில் நடை பெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இ. செல்வநாதன்
செயலாளர்
(C/11629)

# தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் செய்தியாளர் சங்கம் முறையீடு

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு செய்தியாளர் நடேசனின் இல்லத்தின்மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் செயலாளர் இரா.துரைரத்தினம் தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவருக்கு நேற்று கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இல.11, முதலாவது வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியிலுள்ள வீரகேசரி, சக்தி வானொலி மற்றும் ஐ.பி.சி. மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளரும் எமது சங்கப் பொருளாளருமான ஐ.நடேசன் என்பவரது வீட்டில் ஞாயிறு நள்ளிரவு 12.30 மணியளவில் புகுந்தவர்கள் வீட்டுக்குள் குண்டை வீசிச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

மிகவும் இக்கட்டான இக்காலகட்டத்தில் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில் துணிச்சலோடும் நேர்மையாகவும் செயற்பட்ட அவருக்குத் தீங்கை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இச்சம்பவம் நடத்தப்பட்டுள்ளது

மட்டக்களப்பு லேக் வீதியில் அமைந்திருக்கும் அவரது வீடு பாதுகாப்புப்படைகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். கிழக்காக நூறு யாருக்கு அப்பால் கோவிந்தன் வீதி இராணுவ முகாம் சோதனைச் சாவடியும் மேற்காக 50 யாருக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இயக்க அலுவலகமும் காப்பரணும் உள்ளன.

இந்த வீதியில் நள்ளிரவு வேளையில் இச்சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்வது இலகுவானகாரியமல்ல.

எனவே பத்திரிகையாளரை அச்சுறுத்தும் வகையில் அவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்துப் பூரண விசாரணை நடத்தி குற்றவாளிகளை இனங்காணுமாறும் இனிமேல் அதுபோன்ற சம்பவங்கள் எந்த ஒரு பத்திரிகையாளருக்கும் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகின்றேன்.

-என்று உள்ளது.

(ஐ-7-21)

# வடக்கு பத்திரிகையாளரும் கண்டனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

மட்டக்களப்புச் செய்தியாளர் ஐ. நடேசனின் இல்லம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

குண்டுத் தாக்குதல்களை முடுக்கிவிட்டுச் செய்தியாளர்களை அடிபணியவைக்கலாம் எனச் சிலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறுவதில் செய்தியாளர்கள் அரும் பணியாற்றி வருகின்றனர். எனவே செய்தியாளர்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொள்பவர்கள் அவர்களுடன் மனம் திறந்து பேச முன்வர வேண்டும் என்று அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-4)

## கைதியின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.சிறைச்சாலையில் மரணமானதாகத் தெரிவித்து கைதி ஒருவரின் சடலம் நேற்று சிறைச்சாலை அதிகாரியினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கைதியாக இருந்த நவரத்தினம் என்பவரே உயிரிழந்தவராவர்.

சடலம் விசாரணையின பொருட்டு ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-15-139)

## செய்தியாளரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து சுமார் 50 யார் தூரத்தில் கோவிந்தன் வீதி இராணுவ முகாமும், ஈ.பி. ஆர்.எல் எவ் கட்சியின் வரதராஜப்பெருமாள் அணியின்அலுவலகமும் அமைந்துள்ளன.

இதேவேளை -

இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை நடத்தப்படும் எனவும் -

எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

தபால் தொலைத்தொடர்புத் துறைப்பிரதி அமைச்சர் எம்.எஸ்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

## அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் பொதுக் கட்டளை அதிகாரியான ஜெனரல் றொஹான்தலுவத்தையும் வடக்கு யுத்த நடவடிக்கையில் இருந்து தற்போது ஒதுக்கப்பட்டிருப்பது இராணுவ விமர்சகர்களால் ஊன்றிக் கவனிக்கப்படுகின்றது.

(ஐ-உ)

## பளைப்பகுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் மற்றும் தாக்குதல்களினால் அவர்கள்வீடுகளை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் உணவு வசதியின்றி கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண்பிதாக்கள் நேற்று ஈடுபட்டபோதும் அது பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளி பகுதியிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறி கிளாலி தேவாலயப் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் பேரும் தொடர்ந்து அங்கேயே தங்கியுள்ளனர்.அவர்களும் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

(ஐ-4-7-15-31-139-117-173)

## கல்வி அலுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாது உண்ணாவிரதிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தின் முடிவில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கலாநிதி ச.நா.தணிகாசலம் பிள்ளை ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்கான மகஜர்கள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டிருக்கும் எமக்குச் சாதகமான பதிலொன்று இன்னும் ஒருவார காலத்துக்குள் தரப்பட வேண்டும். இல்லையேல் நாம் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்போம். நடைபெறவிருக்கும் ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையை தடுத்து நிறுத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம் - என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உண்ணாவிரதிகளைச் சந்தித்த ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகப் பொறுப்பாளர் எஸ். பிறேம் ஒருவார காலத்துக்குள் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணப்படும் எனவும் -

இது குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் -

தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கமும் உண்ணாவிரதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தப் பிரச்சினை குறித்துக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினால் யாழ். கல்வி அலுவலகத்தின் நாளாந்தப் பணிகள் எதுவும் நேற்றுத் தடைப்படவில்லை

(ஐ-7-9-10-73-51-173-15)

# ஜெனீவாவில் ஐ.நா. அலுவலகம் முன் ஈழத் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

ஜெனீவா,ஏப்.4

ஈழத்தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்து ஜெனீவாவில் - ஐ.நா.அலுவலகத்துக்கு முன்பாக நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நோர்வே, சுவீடன், ஜேர்மனி, மற்றும் இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இடம்பெயர்ந்து வசிக்கும் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் இந்தப்பேரணியில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா நகருக்கு வந்திருந்தனர்.

இந்தப் பேரணியில் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

இந்தப் பேரணியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமியும் பங்குபற்றினார்.

மனித உரிமைத் துஷ்பிரயோகங்களுக்காக எந்தெந்த நாடுகள் பகிரங்கமாகக் கண்டிக்கப்படல் வேண்டும் என்பது குறித்து ஐ.நா. தீவிரமாக ஆலோசனை செய்து வரும் வேளையில் இலங்கை அரசு மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் காட்டுவதாக இல்லை என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

(ஐ-7-4)

## கப்பல் சேவை உடன் ஆரம்பிக்க கோரிக்கை

திருகோணமலை,ஏப்.4

திருகோணமலைக்கும் - காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் கே.வேலும்மயிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் செல்வதற்கென ஆயிரக்கணக்கானோர் தமது அலுவலகத்தில் பெயர் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர் எனவும் -

எனவே மாதாந்தம் நடத்தப்படும் 'லங்கா முடித்த' கப்பல் சேவையையாவது நடத்த ஒழுங்கு செய்து தருமாறும் அவர் உரிய அதிகாரிகளைக்கேட்டுள்ளார்.

(ஐ-7)

## வயோதிபர் சடலம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

பளைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த வயோதிபரின் சடலம் அன்று மாலை பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த எஸ். சுவக்கீன் என்பவரின் சடலமே மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-15-139)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்வதற்கு படைத்தரப்பு எடுத்த முயற்சிகளை புலிகள் முறியடித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடந்த யுத்தத்தில் புலிகளின் பீரங்கி மற்றும் ரொக்கட்லோஞ்சர்களின் தாக்குதலினால் தமது யுத்த டாங்கிகள் இரண்டு சேதமடைந்ததையும் -

புலிகளிடம் சிக்கும் நிலையில் இருந்த தமது டாங்கி ஒன்றைதாமே தகர்த்துள்ளதாகவும்

அரசுப் படைத்தரப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த சண்டையில் படையினரின் இரு பவள் கவசவாகனங்கள் உட்பட இராணுவத் தளபாடங்கள் பலவற்றையும், ஐம்பதுக்கும் அதிகமான துருப்பினரின் சடலங்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் -

நூறுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் -

முகமாலையில் இரு டாங்கிகள் எரிந்து அழிந்துள்ளதாகவும் -

சேதமுற்ற மேலும் ஐந்து டாங்கிகளை படையினர் கட்டி இழுத்துச் சென்றுள்ளதாகவும் -புலிகள் கூறுகின்றனர்.

கொடிகாமம், பளைப்பகுதிகளில் புலிகளுக்கு எதிராக தீவிர தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கூறும் அரசுத் தரப்பு இந்த நடவடிக்கைகளில் தினமும் நூறு புலிகள் வரை பெரியளவில் பாதிக் கப்படுவதாகவும் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நான்கு சிப்பாய்கள் உயிரிழந்துள்ளதாகவும், இரு அதிகாரிகள் உட்பட 35படையினர் காயமுற்றுள்ளதாகவும் அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

கடுஞ்சண்டை நடக்கும் முகமாலைப் பகுதியில் சுமார் 75 பேரைக் கொண்ட புலிகள் அணியைபடையினர் சுற்றி வளைத்திருப்பதாக இராணுவ அறிக்கை தெரிவிக்கின்றது.

நேற்றும் படையினரின் நகர்வு நடவடிக்கைகளை தாங்கள் முறியடித்துவிட்டதாக புலிகள் அறிவித்தனர்.

(உ-8-4-7)

## மனித உரிமை மீறல்குறித்து ஐரோப்பிய ஒன்றியம் காரசாரமான கடிதம்

மனித உரிமைகள் பேணும் விடயங்களில் இலங்கை அரசாங்கம் உடனடியாக அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனக்கோரும் அவசர - கடுமையான வார்த்தைகள் அடங்கிய - கடிதம் ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் குறித்துப் படையினரையும், விடுதலைப் புலிகளையும் சாடியுள்ள ஐரோப்பிய ஒன்றியம் உள்நாட்டுப் போருக்கு முடிவுகாண்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்தப்படல் வேண்டும் எனவும் -

இந்தப் பேச்சுவார்த்தைகள் அரசு, எதிர்க்கட்சி மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய மூன்று தரப்பினரிடையேயும் நடத்தப்படல் வேண்டும் எனவும் - கோரியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத நோர்வே இலங்கையின் இனநெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஆர்வம் செலுத்துவது விரும்பத்தக்கது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

செய்தி ஊடகங்கள் மீதும், செய்தியாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கவை என்றும் - அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-4)

# உணவு, உடைகள் சேகரிக்க றோட்டறக்ட் கழகம் ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு, பளை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து அல்லற்படும் மக்களுக்கு உதவும் பொருட்டு யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் உலர் உணவு மற்றும் உடுபுடைவைகளைச் சேகரிக்கவுள்ளது.

உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி அவதிப்படும் மக்களுக்கு குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து அவற்றினைச் சேகரித்து வழங்கக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்காக இன்று முதல் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று உலர் உணவு மற்றும் உடுபுடைவைகளைச் சேகரிக்கவுள்ளனர்.

இந்த முயற்சிக்கு மனிதாபிமான அடிப்படையில் சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கழகத்தின் செயற்திட்ட இயக்குநர் கேட்டுள்ளார்.

(ஐ-4)

# ஹெலியில் இருந்து வீழ்ந்த எரிதணலால் கூரையில் தீ!

### வேம்பிராய் பகுதியில் சம்பவம்

ஹெலியில் இருந்து வீழ்ந்த எரிதணலினால் வீடு ஒன்றின் கூரை தீப்பற்றி எரிந்தது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11-30 மணியளவில் மீசாலை வடக்கு வேம்பிராய்ப் பகுதியில் இடம்பெற்றது.

கூரையில் தீ மூண்டு எரிவதைக் கண்ட வீட்டுக்காரர் குரல் எழுப்பியதை அடுத்து அயலவர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

ஹெலியில் இருந்து எரிதணல்கள் வீழும் இது போன்ற சம்பவங்கள் தென்மராட்சியில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.

(ஐ-31)

# செயலக அதிகாரிகள் குழு சாவகச்சேரி விஜயம்

யாழ்ப்பாணம், ஏப்.4

குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பின் பேரில் பலாலியில் உள்ள இராணுவ அதிகாரி எதிரிசூரிய யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகத்துடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினார்.

இதனைத் தொடர்ந்து 52 ஆவது பிரிகேட் அதிகாரி மேஜர் தனரஞ்சவை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய மேலதிக அரச அதிபர் அங்கிருந்து யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் சகிதம் சாவகச்சேரி சென்று இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

இதன் பின்னர் அங்குள்ள இராணுவ அதிகாரி கப்டன் கோத்தாக்கொடவையும் இவர்கள் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது கிளாலியில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும் என்று இராணு அதிகாரி வலியுறுத்தினார்.

(ஐ-5)

கொம்பியூட்டர் (கணனி) ஒப்பரேட்டர்தேவை

Microsoft, PageMaker, Microsoft Excel
ஆகியவை தெரிந்தவராகவும் தமிழ் தட்டச்சில் தேர்ச்சியுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். Coral draw தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

நேரில் தொடர்பு கொள்ளவும்

தயா அச்சகம்
கொம்பியூட்டர் ஒவ்செற் பிறின்ட்
(நாவலர் பாடசாலைக்கு முன்பாக)
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் T.P 2881
(75073)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.